எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 05 அதிர்வு 50 ஓகஸ்ட் 2021 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162

பேரிடரின் கோரப்பிடியில் சிட்னி

Photo credit: www.7news.com.au

ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

நாணயமிக்க பணப்பரிமாற்றம் ‘டன்டினொங்’ இல் புதியதோர் சேவை

BOC ලංකා බැංකුව இலங்கை வங்கி

PEOPLE'S BANK

COMMERCIAL BANK

HNB

සම්පත් බැංකුව சம்பத் வங்கி Sampath Bank

UNION BANK

Amãna Bank It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403

royalinfomoney@gmail.com

NEW HOMES
MULTI UNIT DEVELOPMENTS
KNOCK DOWN AND REBUILD
EXTENSIONS
FOR MORE DETAILS:
1300 017272 OR 0405 079 438
INFO@PARACONSTRUCTIONS.COM.AU
WWW.PARACONSTRUCTIONS.COM.AU
PARA Constructions
VBA VICTORIAN BUILDING AUTHORITY
REGISTERED Building Practitioner
MASTER BUILDERS VICTORIA

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI

கொரோனா தடுப்பில் இராணுவம் கடுப்பில் ஆஸ்திரேலியர்கள்

பொன்ராஜ் தங்கமணி

உலகையே உருட்டிபிரட்டிக்கொண்டிருக்கும் கொவிட் பெரும் தொற்றின் தொடர் அலைகளுக்கு மட்டும் முற்றுப்புள்ளிக்கான கால எல்லையை கணிக்க முடியாது உலக நாடுகள் விழிபிதுங்கி நிற்கின்றன. அந்த வகையில் ஆஸ்திரேலியாவையும் உருட்டி பிழிந்து கொண்டிருக்கின்றது கொவிட். அதிக லொக்டவுண்களை சந்தித்த விக்டோரிய தப்பிப்பிழைத்துக்கொண்டிருக்கிறது. விக்டோரியா கொவிட் தொற்றை எதிர்கொண்டிருக்கும் போதெல்லாம் 'அட்வைஸ்' மற்றும் போட்டுதாக்கிகொண்டிருந்த நியு சவுத் வேல்ஸ் மாநில முதல்வர், தனது மாநிலம் எதிர்கொண்டிருக்கும் கொவிட் பேரிடரிலிருந்து தப்பிக்க இராணுவத்தை களமிறக்கியுள்ளார்.

நியூ சவுத் வேல்ஸ் மாநிலம் தினசரி முன்றாடுக் கெண்ணிலான தொற்றாளர்களை அடையாளம் கண்டு கொண்டுதான் இருக்கிறது. இவ்வறான நிலையில் கொவிட்டை கட்டுபடுத்துவதற்கான சட்டங்களை அமுல்படுத்தி கொவிட் தொற்றை விரட்ட வேண்டிய கட்டாயத்தில் மாநில அரசு அனுதினமும் யோசித்து யோசித்து புதிய திட்டங்களை அறிமுகபடுத்திக்கொண்டே இருக்கிறது.

அரசின் சட்டதிட்டங்களுக்கெல்லாம் அடிபணிந்து வீட்டிலேயே முடங்க முடியாது என்ற நிலையில் பெரும் எண்ணிக்கையானோர் வீதியில் இறங்கி போராடினர். அந்த போராட்டத்தில் ஈடுபட்டவர்களை வீடியோ பதிவுகளில் பார்த்து பார்த்து தண்டப்பணத்துக்கான ரசிதுகளை வழங்கி வருவதாக செய்திகளில் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்த பின்னணியை வைத்து மக்களை வழிப்படுத்த மாநில மற்றும் மத்திய அரசுகள் புதிய முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாகவே பொலிஸாருடன் இணைத்து இராணுவத்தையும் களத்தில் இறக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. ஆயுதம் ஏந்தாத இராணுவத்தினர், மக்களை கண்காணிக்கும் பணியில் ஈடுபடுவார்கள் என அறிவித்தும் உள்ளனர். இதன் முதல் கட்டமாக இந்தப் பணியில் முந்நூறு இராணுவ வீரர்கள் பொலிஸாருடன் தெருக்களில் இறங்கி பணியாற்றுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இது போன்ற நடவடிக்கையை சீனா, ஜோர்டான், எல் சால்வடார் மற்றும் இத்தாலி போன்ற பல்வேறு நாடுகள் எடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் தனி நபர் சுதந்திரத்துக்குப் பெயர் போன ஆஸ்திரேலிய நாட்டில் இராணுவம் களமிறங்கியிருப்பது மக்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

நியூ சவுத் வேல்ஸ் மாநிலப் பொலிஸ் அமைச்சர் டேவிட் எலியட், முந்தைய அவசர காலங்களில் பொலிஸாருக்கு இராணுவம் உதவியதாகவும் அவர்களின் "தனித்துவமான" திறன்கள் தங்களுக்கு அவசியம் என்றும்-

"இராணுவத்தின் தனித்துவமான திறமைகள் மற்றும் பயிற்சிகள் நமது பொலிஸ் அதிகாரிகளுடன் பல நேரங்களில் நம் மக்களுக்கு நெருக்கடியான நேரங்களில், அதாவது வெள்ளம் மற்றும் கடுமையான காட்டுத்தீ போன்றவற்றில் சேவை செய்ய உதவியது" என்றும் கூறி இருக்கிறார்.

ஆஸ்திரேலியாவைப் பொறுத்தவரை இதற்கு முன்னர் இராணுவம் நாடு முழுதும் பல முனைகளில், கோவிட் விடயத்தில் இருப்பிடத்தில் தனிமைப்படுத்தும் (hotel quarantine) முயற்சிகளில் பணி செய்து இருந்தாலும் தெருவில் இறங்கி பணி செய்யப் போவது இப்பொழுது தான். கம்பர்லேண்ட் மேயர் ஸ்டீவ் கிறிஸ்டோ, மேற்கு சிட்னிக்கு இராணுவத்தை வரவழைப்பது தீவிர நடவடிக்கை என்றும் மாநில அரசு "முழுமையான கட்டுப்பாட்டை இழந்துவிட்டது" என்று கூறி உள்ளார்.

"இராணுவம் தனது மக்களை பாதுகாப்பதற்காக இங்கே உள்ளது, அவர்களுக்கு எதிராக பயன்படுத்தப்படக்கூடாது," என்றும் கூறி இருக்கிறார். மேலும் அவர், இராணுவத்தை மற்ற நடவடிக்கைகளுக்கு உதவ பல வாரங்களுக்கு முன்பு கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும், அவர்களை தடுப்பூசிகளை வழங்குவதற்கும், உணவு கொடுப்பதற்கும் மற்றும் பிற உதவிகளுக்கும் பயன்படுத்தி இருக்கலாம் என்று கூறி இருக்கிறார்.

பூர்வகுடியினருக்கான சட்ட சேவை மையமும் அரசின் இந்த நகர்வை விரும்பவில்லை. அரசாங்கம் இராணுவத்தைப் பயன்படுத்துவதும், அதிக பூர்வகுடி மக்கள் தொகை கொண்ட சமூகங்கள் மீது பொலிஸாருக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்குவதும் ""கவலைக்குரியது" என்று தெரிவித்துள்ளது.

"மேற்கு மற்றும் தென்மேற்கு சிட்னியில் ஒரு குறிப்பிடத்தக்க அளவில் பூர்வகுடி சமூகம் உள்ளது" என்று கூறும் அதன் தலைமை நிர்வாகி கார்லி வார்னர், "எங்கள் சமூகம் நாளுக்கு நாள் பொலிஸாரால் குறிவைக்கப்படுகிறது - பொலிஸாருக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டு இராணுவத்தரப்பை சேர்த்து இது மேலும் அதிகரிக்கப்பட்டால், நிலைமை மோசமாகி விடும் என கவலை தெரிவித்துள்ளது.

குடியேற்றவாசிகளும், பிற மொழி பேசும் மக்களும் அதிகமாக வாழும் மேற்கு மற்றும் தென்மேற்கு சிட்னி பகுதியில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது ஒருவித பிரிவினையையும் ஏற்படுத்தி உள்ளது. கொரோனா கால கெடுபிடி சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு சிட்னியின் பாண்டி(Bondi பீச்) கடற்கரையில் விதிமுறையை மீறி கூடிய கூட்டத்தினரை அடக்குவதற்காக தென்மேற்கு சிட்னி பகுதியை குறிவைத்து இராணுவம் இறக்கபட்டதா என்கிற கேள்வியும் எழுகிறது. இவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்துவது என்பது மக்களைப் பிரிக்கும் செயற்பாட்டுக்கு ஒப்பானது மட்டுமின்றி ஆஸ்திரேலியாவின் தடுப்பூசி வழங்கும் திட்டம் மிக மந்த கதியில் நடைபெற்றதும் இந்த நெருக்கடிக்கு ஒரு காரணம். இதை மறைப்பதற்காக, கொவிட் சட்டதிட்டங்களுக்கு மக்களின் ஒத்துழைப்பு இல்லை என்ற மாயை தோற்றத்தை உருவாக்க ஸ்கொட் மொறிஸனின் அரசு முனைகிறது -என்கிற குற்றச்சாட்டை எதிர் கட்சிகள் வலுவாக எடுத்து வைக்க ஆரம்பித்து உள்ளன. கொரோனாவின் தீவிரம் ஒரு பக்கம் அதிகரிக்க அது சார்ந்த அரசியலும் இன்னொரு பக்கம் சூடு பிடிக்கிறது.

இதன் பாதிப்புகளை தொழிலாளர்கள், வணிக நிறுவனங்கள், ஒப்பந்த தொழிலாளர்கள் மட்டும் இன்றி பள்ளிக்குச் செல்லும் சிறுவர்கள் என அனைவரும் சந்திக்க ஆரம்பித்து விட்டனர். மாறுபட்ட டெல்டா கொரோனா வைரஸின் தீவிரம் ஆஸ்திரேலியாவிற்கு ஒரு புதிய சவாலைத் தந்து உள்ளது. அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் மூலம் இது வரை பொருளாதார ரீதியில் மக்கள் சமாளித்தாலும், இப்படியே அரசின் பண உதவியின் மூலமே இதை வெகு நாட்கள் கொண்டு செல்ல முடியாது என்பது நிதர்சனமான உண்மை.

தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை விரைவுபடுத்தல் -தனிமைப்படுத்தல் திட்டத்தை சரிவர நடைமுறை படுத்தல் - நோய்கட்டுப்பாட்டு முறைகள் மூலம் தடுத்தல் முயற்சி போன்றவற்றை அரசும் மக்களும் இணைந்து செயற்படுத்தாத பட்சத்தில் மற்ற உலக நாடுகளில் ஏற்பட்டதைப் போல வாழ்வுக்கும் வாழ்வாதாரத்துக்குமான போராட்டம் இன்னும் சிலவாரங்களில் உச்சம் பெறபோவதில் மாற்றுக்கருத்திருக்கப்போவதில்லை.

Picture : Theaustralian.com


24 வருட கால
நகை
அடகுச்சேவை
Maximum Value | Quick Service | Lowest Rate
• குறைந்த வட்டி வீதம்
• கடன் தொகை படிப்படியாக மீள் செலுத்தும் வசதி
• ஏழு நாட்களும் சேவையில்
EZY CASH PAWN SHOP
அடகுகடை
EZY CASH
Bala 0420 877 303
#Shop L01 102c, Dandenong Plaza Shopping Centre, 49-55 McCrae Street, Dandenong VIC 3175

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல்:03 அதிர்வு: 50 ஓகஸ்ட் 2021 தொ.பே:1800 960 162

மக்கள் தொகை கணக்கெடுப்பும் தமிழ் மொழி கல்வியின் நிலையும்

ஆஸ்ரேலியாவின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி நடைபெற இருக்கிறது. தமிழர்களின் எண்ணிக்கையைப் பிரதிபலிக்கும் வகையில் நாம் யாவரும் எம்மைத் தமிழராகவும், வீட்டில் தமிழ் பேசுவோராகவும் பதிவு செய்யவேண்டும் என்ற வேண்டுகோள் பலராலும் உற்சாகத்துடன் முன்வைக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு செய்வதால் தமிழர் சமூகத்திற்குப் பல நன்மைகள் விளையும் என்பது உண்மையாகும். எனவே, இதனை நாமும் முழுமையாக ஆதரிக்கிறோம்.–

அதேவேளை, இது வெறுமனே பத்திரத்தைப் பூர்த்தி செய்து, உணர்ச்சியைக் காட்டிவிட்டு ஒய்ந்து போகும் ஒரு செயலாக மட்டும் அமைந்துவிடக் கூடாது என்பதையும் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம். 'தமிழர்' என்ற வகையில், எமது மொழிக்கும் சமூகத்துக்குமான எமது பொறுப்புகளை எந்த அளவுக்கு நிறைவேற்றுகிறோம் என்ற கேள்வியை எம்மை நாமே கேட்பதற்கும் இது பொருத்தமான தருணமாகும்.

எம்மில் எத்தனை வீதத்தினர் வீட்டில் எமது பிள்ளைகளுடன் தமிழில் பேசுகிறோம்? அல்லது, எங்களுக்குள் இனிய தமிழில் உரையாடுகிறோம்? எத்தனை வீதத்தினர் எமது பிள்ளைகளைத் தமிழ்ப் பாடசாலைக்கு அனுப்புகிறோம்? இவற்றுக்கு எம்மிடத்தில் சரியான புள்ளி விபரங்கள் இல்லாவிட்டாலும் கூட, எண்ணிக்கைகள் மிகவும் கவலைக் கிடமானவை என்பதை நாம் உய்த்துணரலாம். எம்மைச் சுற்றியுள்ள ஏனைய பல இனங்களுடன் ஒப்பிடுகையில், நாம் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலையில் உள்ளோம் என்பது கசப்பான உண்மையாகும்.

பிள்ளைகளுக்கு இரண்டாம் மொழியைக் கற்பிப்பதால் கிடைக்கக்கூடிய பெறுமதிமிக்க பயன்பாடுகளைப் பற்றி ஆய்வாளர்களும், அறிஞர்களும் நிறையவே விளக்கியுள்ளனர். எனினும்கூட, தமிழ் கற்பதென்பது சிறுபான்மை யோராக உள்ள ஒரு பகுதியினரைத் தவிர, ஏனையோரின் மனங்களில் முக்கியத்துவம் பெறாமல் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும். விளையாட்டு முதல் வீணை வரை, நீச்சல் முதல் நடனம் வரை எல்லாம் முடிந்த பிறகு, 'நேரமிருந்தால் தமிழ்' என்னுமொரு நிலை உள்ளதுபோலத் தோன்றுகிறது. இதனை மாற்றுவது எவ்வாறு?

மத்திய அரசும், மாநில அரசுகளும் பல்கலாசாரத்துக்கும், சமூக மொழிக் கல்விக்கும் பேராதரவு தருகின்றன. விக்ரோரியாவிலும், நியூ சவுத் வேல்சிலும் பல்கலைக்கழகம் புகுவதற்கான எல்லாப் பாடங்களையும் போலத் தமிழ்மொழியும் 12 ஆம் ஆண்டுக்கு, சமத்துவ மான ஒரு பாடமாக ஏற்றுக்கொள்ளப்பட் டுள்ளது. எனினும், இந்த அரிய வாய்ப்பை ஒரு சிலர் மட்டுமே பயன்படுத்திக்கொண்டிருப்பது ஏன்?

இவ் விடயத்தில், தமிழ் மொழியைக் கற்பிக்கும் பாடசாலைகளை நோக்கியும் சில கேள்விகளைக் கேட்டல் பொருத்தமானது. மிகுந்த அர்ப்பணிப்போடும், உற்சாகத்தோடும், எத்தனையோ தொண்டர்களின் உழைப்பினை உரமாக்கி உங்கள் பாடசாலைகளை நடாத்தி வருகிறீர்கள். பாராட்டத்தக்க இந்தச் சேவையின் பயனாக, சிறுவயதில் இணையும் உங்கள் மாணவர்களில் எத்தனை சத வீதத்தினர் 12 ஆம் ஆண்டு வரை பயணிக்கின்றனர்? பெரும்பாலான மாணவர்கள் இடை நடுவே தமிழைக் கைவிடுகின்றனர் எனில், அதற்கான காரணமென்ன? பல்கலைக்கழகம் செல்வ தற்குக் கை கொடுக்கக்கூடிய தமிழை மாணவர்கள் கைவிடுவது ஏன்?

ஆண்டு தோறும் 12 ஆம் ஆண்டுத் தமிழ் மொழிப் பரீட்சை முடிவுகள் வெளிவரும்போது, ஒருகை விரல்களுக்குள் எண்ணக்கூடிய ஒரு சில மாணவர்கள் உயர் புள்ளிகளைப் பெறுவது வழக்கம். இந்த மாணவர்களும், சின்னஞ் சிறு வயதிலிருந்து இவர்களை உருவாக்கிய பாடசாலைகளும் பாராட்டுக்கு உரித்துடையவர் களே. எனினும் தமிழைப் பாதி வழியில் கைவிட்டவர்களைப் பற்றிச் சமூகமோ, ஊடகங்களோ கவனிப்பதில்லை. தாயகத் திலிருந்து அண்மையில் வந்து, ஓரிரு ஆண்டுகளுக்குள் இங்கே பரீட்சை எழுதும் மாணவர்களின் எண்ணிக்கை விரைந்து வீழ்ச்சியடையப் போகிறது. மழலை வகுப்பில் தொடங்கும் மாணவர்களை, அவர்களின் ஆர்வம் குன்றாது வளர்த்தெடுத்து, 12ம் வகுப்பு வரை கொண்டு செல்லக்கூடிய திறமையும், தராதரமும் கொண்ட பாடசாலைகளே எமது இன்றைய தேவை. தாயகத்திலிருந்து வந்த, மற்றும் "இரவல் பெற்ற" மாணவர்களின் உயர்புள்ளிகளில் குளிர் காயாமல், ஒவ்வொரு பாடசாலையும் தம்மைச் சிறு வயதிலேயே தேடிவரும் ஒவ்வொரு குழந்தையையும் அரவணைத்து, 12 ஆம் ஆண்டுவரை முன்னேற்றக்கூடிய வல்லமையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதேவேளை, பிள்ளைகளைத் தமிழ்ப் பாடசாலைக்கு அனுப்பும் பெற்றோரும் தமது பொறுப்புகளை மறக்கலாகாது. பாடசாலையை ஒரு 'மலிவான பிள்ளை பராமரிப்பு நிலையம்' போலக் கருதி, வாயிலில் இறக்கிவிட்டுக் கடைத் தெருவுக்கு ஓடி மறையும் பெற்றோர் பற்றி நீண்ட காலமாகவே குறையொன்று உள்ளது. இவர்கள் பிள்ளையின் தமிழ் மொழிக் கல்வி பற்றி அதிகம் சிந்திப்பதில்லை. பிள்ளையைப் பாடசாலையில் சேர்த்தவுடன் தமது கடமை முடிந்து விட்டதாகப் பெற்றோர் கருதக் கூடாது. எவ்வாறு ஏனைய பாடங்கள் பற்றி அக்கறை எடுக்கிறோமோ அவ்வாறே தமிழிலும் அக்கறை தேவை.

முடிவாக, விரைவில் நடக்க இருக்கும் ஆஸ்ரேலிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பில், தமிழர்களாகிய நாம் யாவரும் எம்மைத் தமிழர்களாக இனம் காணவேண்டியது முக்கியமானது. எனினும், அத்துடன் நில்லாது, தமிழர்களாக நாம் வாழவும் வேண்டும். வீட்டில் தமிழ் பேச வேண்டும். பிள்ளைகளைத் தமிழ்ப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும். அவர்களின் முன்னேற்றத்தில் அக்கறை எடுக்க வேண்டும். அதேவேளை, தமிழ்ப் பாடசாலைகளும் தமது மாணவர்களுக்குத் திருத்தமாகக் கல்வியூட்டுவதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். சிறு வயதிலிருந்து தாம் வளர்த்தெடுத்த மாணவர்கள் பெறும் உயர் சித்தியே தமது பெருமை எனக் கருத வேண் டும்.

Sai Shree Foods

Pty. Ltd.

AUSTRALIA - CANADA - INDIA

REMARKABLE QUALITY AND RELISHING TASTE.

If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

HEAD OFFICE: Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

DISTRIBUTORS: Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

‘லிட்டில் இந்தியா!’ குறுகிய பெருமையின் அடையாளமா?

சிட்னியில் உள்ள ஹாரீஸ் பார்க் பகுதியில் உள்ள **3** முக்கிய தெருக்களை ‘லிட்டில் இந்தியா’ என அதிகாரப்பூர்வமாக ஒரு **6** மாதத்திற்கு பாரமட்டா கவுன்சில் பெயரிட்டுள்ளது.

பாரமட்டா கவுன்சிலின் சுற்றுலா இலக்கு மேலாண்மைத் திட்டத்தின் (Destination Management Plan) கீழ், ஹாரீஸ் பார்க் பகுதியை, சுற்றுலா சம்பந்தப்பட்ட **5** முக்கிய பகுதிகளில் ஒன்றாகத் தேர்ந்தெடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இது போன்ற இடங்களில், தனித்துவமான அனுபவங்களையும், பல்கலாச்சார உணவு வகைகளையும் உள்ளூர் சமூகத்திற்கும் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கும் ஏற்படுத்தித் தருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஹாரீஸ் பார்க் வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகள், அப்பகுதி மக்களுடன் கலந்து ஆலோசித்த பிறகே, லிட்டில் இந்தியா என்கிற **6** மாத முன்னோட்டத்தை அறிவிப்பதாக பாரமட்டா கவுன்சில் தெரிவித்துள்ளது. இத்திட்டம், உள்ளூர் மற்றும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை ஊக்குவிக்கவும், அப்பகுதியின் வணிகத்தை மேம்படுத்தவும் உதவும் எனக் கூறப்படுகிறது.

இந்திய வம்சாவழி மக்களைக் கேட்டால், இது ஒரு பெருமை (Pride) என்கிற அளவில்தான் கூறுகிறார்கள். வேறு பயன்களைப் பற்றிப் பேசுவதில்லை. ஆனால், அப்பகுதியில் வண்டி தரிப்பிடம் (Car Parking) கிடைக்காமல் அலைபவர்களைக் கேட்டால், லிட்டில் இந்தியா பெயர் மாற்றம் ஒரு தேவை இல்லாத ஆணி என்றே குமுறுகிறார்கள். மேலும் கூட்ட நெரிசல், பொதுக் கழிப்பிட வசதி மற்றும் சுத்தமின்மை எனப் பல பிரச்சினைகளை முதன்மையானதாக முன்வைக்கிறார்கள்.

ஹாரீஸ் பார்க் எனும் பன்முகக் கலாச்சார மையம்:

ஆஸ்திரேலியாவின் எந்தப் பகுதியை எடுத்தாலும், அது ஒரு பன்முகக் கலாச்சாரங்களின் கலவையாகவே பார்க்கப்படுகிறது. அது போலவே, ஹாரீஸ் பார்க் பகுதி ஒரு வளர்ந்து வரும், மாறிக் கொண்டிருக்கும், ஒரு பன்முகக் கலாச்சார மையமாகும். இங்கு இந்திய வம்சாவழியினரின் கடைகளும், மக்கள் தொகையும் அதிகம் என்பதும் மறுக்க முடியாத உண்மை. அதே நேரத்தில், பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, லெபனான் மற்றும் வியட்னாம் பொன்ற பிற நாட்டு மக்களையும் உள்ளடக்கியது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஆனால், இன்று ஹாரீஸ் பார்க் என்றாலே இந்திய உணவு மற்றும் இந்தியக் கடைகள் என்கிற பிம்பம் உருவாக்கப் பட்டிருக்கிறது. அது ஆஸ்திரேலியாவின் பன்முகக் கலாச்சார எண்ணத்திற்கு எதிரானதாகவே தெரிகிறது.

பல்லிளிக்கும் இந்தியாவின் பன்முகத் தன்மை:

ஆஸ்திரேலிய நாட்டின் பன்முகத் தன்மை என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். ஏற்கனவே, இந்தியா என்றால் ஹிந்து மதத்தைச் சார்ந்தவர்கள், ஹிந்தி பேசுபவர்கள் மற்றும் பாலிவுட் படங்களையே பார்ப்பவர்கள் என்கிற பிம்பத்தை உருவாக்க முனைப்புடன் செயல் பட்டு வருகிறார்கள்.

ஒருவேளை லிட்டில் இந்தியா நிலை பெற்றுவிட்டால், அது வட இந்தியர்களையும் அவர்களின் வர்த்தகங்களையும், பழக்க வழக்கங்களையும் முதன்மைப் படுத்தவே உதவியாக இருக்கும் என்கிற சந்தேகம் இந்தியவின் பிறபகுதியிலிருந்து வரும் மக்களுக்கு ஏற்படுகிறது.

சைனா டவுன் இருக்கிறது. அது போல, ஏன் லிட்டில் இந்தியா இருக்கக் கூடாது என்கிற பொதுக் கேள்வியைக் கேட்டு, ஒரு குறுகிய போட்டி மனப்பான்மையை முன்வைக்கவும் தவறவில்லை.

இதன் ஆரம்பக் காலகட்டத்தில், பாரமட்டா கவுன்சில் நடத்திய இணையவழி கருத்துக் கணிப்பில், **76** வீதமான மக்கள் லிட்டில் இந்தியா பெயர் மாற்றத் திட்டத்தை ஆதரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பிறகு, கவுன்சில் முறைசாரா (informal) குழு ஒன்றை அமைத்து நடத்திய பல நேரடி கலந்துரையாடலில் 80 வீதமானவர்களின் ஆதரவு கிடைத்திருப்பதாகச் சொல்லியிருப்பதும் கவனித்திற்குரியது.

அனைவருக்குமான ஆஸ்திரேலியா:

ஹாரீஸ் பார்க் ‘லிட்டில் இந்தியா’ பெயர் மாற்றத் திட்டம், அந்தப் பகுதியின் பன்முகப் பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் அங்கீகரிக்காமல், இந்தியா என்கிற ஒருமுகத் தன்மையையே முன்வைக்கிறது.

ஒரு வேளை ‘லிட்டில் இந்தியா’ ஒரு சுற்றுலா இடமாக மாறினால், அப்பகுதியில் உள்ள இந்திய உணவகங்களுக்கு அதிக வருமானமும், முதலீடும் கிடைக்கும் என்கிற குறிக்கோள் மட்டுமே உறுதியாகத் தெரிகிறது. இதில் கலாச்சார மேம்பாடும், பன்முகத் தன்மையும் எங்கிருக்கும் என்பது ஒரு மிகப் பெரிய கேள்விக்குறி.

● கோகுலன், சிட்னி

IMMIGRATION LAW ACCREDITED SPECIALIST

PARISH PATIENCE IMMIGRATION LAWYERS FOUNDED 1888

MIA Migration Institute of Australia

Our large legal team provideds a full range of specialist immigration legal services no matter where you are in the world at competitive rates

Michael T. Jones
Legal Practice Manager
Accredited Specialist in Migration Law
MARN: 9255530
Email: MTJONES@ppilaw.com.au

Mahalingam (Shan) Sutharshan
LL.B (Col), LL.M (Monash), LL.M (ANU).
Director
MARN: 0961664
Email: SHAN@ppilaw.com.au

Prasad Pahalawela
Solicitor & Migration Agent
MARN: 12800846
Email: PRASADP@ppilaw.com.au

Ashwina Krishnan
Solicitor & Migration Agent
MARN: 1913008
Email: ASHWINAK@ppilaw.com.au

Non - Immigration Matters

- Family Law & Divorce Application
- Criminal Law
- Traffic Offences
- Commercial & Business Law

Our professional provide expert assisstance with:

- Business & Investment Visas SC188, 888, and 132
- Student SC500 and Student Dependent Visa
- SC485 (TR) and SC485 Dependent Visa
- General Skilled Migration (GSM) SC189, 190 and 489 Visa
- Skilled Assessment, SkillSelect, EOI
- State Sponsorship and Nomination
- ENS (SC186), RSMS (SC187) and TSS (SC482)
- Refugee & Asylum Seekers SC866
- Temporary Protection Visa SC785
- Safe Haven Enterprise Visa (SHEV) SC790
- Family, Partner, Child, Parent, and Carer Visa
- Visitor SC600 and Working Holiday Visa
- Distinguished Talent Visa
- Citizenship and Resident Return Visa
- Administrative Appeal Tribunal (AAT)
- Federal Circuit Court, Federal Court & High Court
- Visa Cancellation, Detention and Deportation
- Health, Character & Identity Issues (PIC4020)
- All other visas and Immigration matters
- Commercial and Property matters

Lawyers and Registered Migration Agents: T. Nguyen: Director & MARN: 0322836 | A. Dougall Lawyer & MARN: 1684660 | A Shah MARN: 1801710 | A Charif: MARN: 1803234

Parish Patience Immigration Lawyers | Level 3, 83 York Street Sydney NSW 2000 | Tel: +61 02 9286 8700 | E: PPMAIL@ppilaw.com.au | W: www.parishpatience.com.au

ஆஸ்திரேலியாவிலிருந்து இலங்கை போய் வர 5 இலட்சம் ரூபா

இலங்கையில் இன்னமும் கொரோனா வைரஸ் பரவல் முழுமையாக கட்டுக்குள் வராத போதிலும், நாட்டை திறக்கும் நோக்கில் 'கொரோனா' நடைமுறைகளில் பல தளர்வுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக சுற்றுலாத்துறை மற்றும் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக தம்மால் முடிந்தளவு தளர்வுகளை இலங்கை அரசு செய்துள்ளது.

அந்தவகையில் ஆஸ்திரேலியா உட்பட வெளிநாடுகளில் இருந்து இலங்கை செல்பவர்கள் கொவிட்- 19 தடுப்பூசியின் 2 டோஸ்களையும் பெற்றிருந்தால், பிசிஆர் பரிசோதனை முடிவு 'நெகடிவ்' எனில் தனிமைப்படுத்தல் இன்றி தமது வீடுகளுக்கு செல்ல முடியும். ஒரு தடுப்பூசியை ஏற்றியவர்களுக்கும் சில நடைமுறைகள் அமுலில் உள்ளன.

அதேவேளை, ஆஸ்திரேலியாவில் இருந்து இலங்கை செல்வதற்கு 800 ஆஸ்திரேலியா டொரும், இலங்கையில் இருந்து மீண்டும் ஆஸ்திரேலியா திரும்புவதற்கு 3,500 டொலரும் விமான போக்குவரத்துக்காக மட்டும் செலவாகின்றது. இரு வழி பயணத்துக்காக இலங்கை ரூபாவில் 5 லட்சம்வரை செலவாகின்றது.

வெளிநாடுகளில் இருந்து இலங்கை வருபவர்களுக்கான புதிய நடைமுறைகள் வருமாறு,

1. ஸ்ரீலங்கா சுற்றுலாத்துறையின் பயோ பபிள் மூலம் வருகை தராத பயணிகள் அல்லது ஒரு தடவை கூட தடுப்பூசி போடாதவர்கள் அல்லது ஒரு தடுப்பூசி மாத்திரம் செலுத்திக்கொண்டவர்கள் விமானங்களில் பயணிக்கலாம். ஆனால் அந்த விமானங்களில் 75 பயணிகளை மாத்திரம் ஏற்றலாம்.

2. முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொண்ட பயணிகள் விமானங்களில் பயணிக்கலாம் (உரிய டோஸ்களை செலுத்தியிருக்கவேண்டும்- 14 நாட்கள் கடந்திருக்கவேண்டும்) பயணிகளின் எண்ணிக்கையில் எந்த வித கட்டுப்பாடுகளும் இன்றி விமானங்கள் அழைத்து செல்லலாம்.

(விளக்கம் - இது ஹோட்டல் தனிமைப் படுத்தலிற்கும் அரசாங்க தனிமைப்படுத்தலிற் கும் வரும் பயணிகளை உள்ளடக்கும்.)

3. ஸ்ரீலங்கா சுற்றுலாத்துறையின் பயோ பபிள் மூலம் வரும் பயணிகளை எண்ணிக்கையில் எந்த கட்டுப்பாடும் இன்றி விமானங்கள் அழைத்து செல்லலாம்.

4. 123 ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட பயணிகள் அனைவரையும் ஏற்றிச்செல்லும்போது நடைமுறையில் உள்ள இலங்கை சுகாதார மற்றும்சிவில் விமான போக்குவரத்து ஆணையத்தின் பொருந்தும் வழிகாட்டுதல்களிற்கு இணங்க கொண்டு செல்லவேண்டும்.

5. இரண்டு மற்றும் இரண்டு வயதிற்கு மேற்பட்ட அனைத்து பயணிகளும் விமானநிலையத்தில் வந்திறங்கியதும் (முதல்நாள்) சுகாதார அமைச்சு அனுமதித்த ஆய்வுகூடத்தில் பிசிஆர் சோதனையை முன்னெடுக்கவேண்டும்.

6. விமானநிலையத்தில் வந்திறங்கியதும் மேற்கொள்ளப்படும் பிசிஆர் சோதனையில் கொரோனா பாதிப்பு இல்லை என தெரிவிக்கப்பட்டால் முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொண்ட பயணிகளிற்கு தனிமைப்படுத்தல் அவசியமில்லை.

7. முழுமையாக தடுப்பூசி செலுத்தாத அல்லது ஒரளவு செலுத்திக்கொண்ட பயணிகள் ஜூலை 7-15- திகதிகளில் சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கொரோனா விதிமுறைகள் தேவைகள் தொடர்பாக வெளியிட்ட உத்தரவுகளை பின்பற்றவேண்டும்.

8. விமானத்தில் வந்திறங்கிய பயணிகளை பிசிஆர் சோதனைகளின் போது அவர்கள் பாதிக்கப் படவில்லை என தெரிந்த பின்னர் விமான நிலையத்திலிருந்து அனுப்பும்போது (முதலாவது நாள்) - ஹோட்டல் - தனிமைப்படுத்தல் நிலையம் - தனிமைப்படுத்தலிற்கு பொறுப்பான அதிகாரி, அல்லது ஹோட்டல் மருத்துவர் அவர்களை வெளியேற அனுமதிப்பதற்கான ஆவணத்தை வழங்கவேண்டும்,அந்த விபரங்களை சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவிற்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பவேண்டும்.

9. 18 வயதிற்கு குறைவான சிறுவர்கள் காணப் பட்டால் அவர்களை முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொண்ட பெற்றோருடன் செல்வதற்கு அனுமதிக்கலாம். ஆனால் பின்வரும் விடயங்களை பின்பற்றவேண்டும்.

2 முதல் 18 வயதுடைய சிறுவர்கள் விமான நிலையத்திற்கு வந்துசேர்ந்ததும் பிசிஆர் சோதனைகளை மேற்கொள்ளவேண்டும். அவர்கள் பாதிக்கப்படவில்லை என்பது உறுதியாகவேண்டும்.

இரண்டு வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் பிசிஆர் சோதனைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்,எனினும் அவர்கள் முழுமையாக தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுடனேயே செல்வதற்கு அனுமதிக் கப்படுவார்கள்.

எனினும் விமானநிலையத்திற்கு வந்துசேர்ந்த தினத்தன்று சிறுவர்களுடன் வந்தவர் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது கண்டறியப்பட்டால்- இரண்டு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளும் பிசிஆர் சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

10. முதல் நாள் பிசிஆர் சோதனையின் போது கொரோனா தொற்றினால் பாதிக்கப்படவில்லை என்பது உறுதியானதும் பயணிகள் தாங்கள் பயணம் செய்யவுள்ள இடத்திற்கு தாங்கள் தங்கள் சொந்த போக்குவரத்தினை ஏற்பாடு செய்யவேண்டும்,அரசபோக்குவரத்தினை பயன்படுத்த கூடாது.

11. பயணம் முழுவதும் முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொண்ட பயணிகள் இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ள கொவிட் 19 கட்டுப்படுத்துவதற்கான இலங்கையிலிருந்து வெளியேறும் வரை முழுமையாக பின்பற்றவேண்டும். இந்த நடைமுறைகள் குறித்த விபரங்கள் முதல் நாள் வெளியேறும்போது வழங்கப்படும்.

12. வாகன சாரதியும் பயணிகளும் முகக் கவசங்களை உரிய விதத்தில் பயண காலம் முழுவதும் அணிந்திருக்கவேண்டும்.

13. விமானநிலையத்திலிருந்து வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்பட்டதும்- முதல்நாள்- ஹோட்டல் தனிமைப்படுத்தலில் கொரோனா பாதிப்பு இல்லை என உறுதியானவர்கள்- அல்லது முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள் தாங்கள் செல்லவுள்ள பகுதிக்கு இடையில் எங்கும் நிற்காமல் செல்லவேண்டும்.

14. புறப்படுவதற்கு முன்னரான பிசிஆர் பரிசோதனை அறிக்கை இலங்கைக்குள் பயணம் செய்பவர்கள் அனைவரும் கட்டாயமாக பிசிஆர் சோதனையில் கொரோனாவல் பாதிக்கப்படவில்லை என்பது உறுதியான அறிக்கையை ஆங்கிலத்தில் வைத்திருக்கவேண்டும்.

புறப்படுவதற்கு 72 மணித்தியாலத்திற்கு முன்னர் இந்த சோதனை முன்னெடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

குறிப்பு- புறப்படுவதற்கு முன்னரான துரித அன்டிஜென் பரிசோதனை முடிவுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

Australian Bureau of Statistics

Census

உங்களுடைய மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் படிவத்தினை நீங்கள் நிரப்பவேண்டிய நேரம் வந்துவிட்டது.

இந்த ஆண்டு, **ஆகஸ்ட்டு மாதம் 10-ஆம் திகதி செவ்வாய்** அன்று வரவிருக்கும் **மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இரவில்** நீங்கள் எங்கு இருப்பீர்கள் என்று உங்களுக்குத் தெரிந்தால், உங்களுக்கான அறிவுறுத்தல்கள் கிடைக்கப் பெற்றவுடன் நீங்கள் துவங்கலாம்.

இதை இணைய-வழியில், காகிதப் படிவம் ஒன்றில் அல்லது எமது உதவியுடன் பூர்த்தி செய்யுங்கள்.

Every stat tells a story.

இதை ஸ்கேன் செய்யுங்கள், அல்லது census.abs.gov.au எனும் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள்

உதவிக்கு **1800 512 441** எனும் இலக்கத்தினை அழையுங்கள் (**131 450** எனும் இலக்கத்தில் வேறு மொழிகள் பேசுவோருக்கான உதவி கிடைக்கும்).

Authorised by the Australian Bureau of Statistics, Canberra.

5 மில்லியன் டொலர்கள் பெறுதிமதியான திருட்டு பொருட்களை வாங்கி குவித்த ஆஸி.

10-11ஆம் நூற்றாண்டுக் கால விஷ்ணு - லக்ஷ்மி சிலை

Photos : www.abc.net.au

● கோகுலன், சிட்னி

5 மில்லியன் ஆஸ்திரேலிய டொலர் பெறுமதியான ஒரு கலைப் பொருளை வாங்கி, அது திருட்டுப் பொருள் என்று தெரிந்தவுடன், அதை நீங்கள் திருப்பித் தருவீர்களா? ஆனால், ஆஸ்திரேலியா அப்படிப்பட்ட எட்டு சிலைகள் உள்ளிட்ட கலைப் பொருட்களை இந்தியாவிடம் திருப்பித் தந்துள்ளது. 2014 முதல் திருப்பி அளிக்கப்பட்ட கடத்தப்பட்ட சிலைகள் மற்றும் கலைப் பொருட்களின் மதிப்பு 2இலட்சத்து 25,000 டொலர்கள் முதல் 5 மில்லியன் டொலர்கள் வரையாகும். இந்தப் பொருட்களை வாங்கும் பொழுது, இவை கடத்தப்பட்டவை எனத் தமக்குத் தெரியவில்லை எனவும் விளக்கம் அளித்துள்ளது ஆஸ்திரேலியா. ஆனால், இத்துறை வல்லுநர்கள், இன்னும் பல பழங்காலக் கடத்தப்பட்ட கலைப் பொருட்கள், ஆஸ்திரேலியாவின் உயரிய அருங்காட்சியகங்களில் இருக்கின்றன என்றும் சந்தேகிக்கின்றனர்.

யார் திருடியது?

சுபாஷ் கபூர் என்னும் இந்தியர் நடத்திய 'Manhattan' s Art Gallary of Past' என்ற நிறுவனத்திடமிருந்து, ஆஸ்திரேலிய கலை மற்றும் அருங்காட்சியகங்களால் மொத்தம் 22 சிலை மற்றும் கலைப் பொருட்கள் வாங்கப் பட்டுள்ளன. சுபாஷ் தற்பொழுது உலகளாவிய சிலை கடத்தல் குற்றங்களுக்காக இந்தியச் சிறையில் உள்ளார்.

2014-இல் இந்தியாவிடம், தெற்கு ஆஸ்திரேலிய அருங்காட்சியகத்தால் திருப்பி அளிக்கப்பட்ட, 5 மில்லியன் டொலர் விலை கொண்ட நடராசர் சிலைதான், 2008-இல் இவரிடமிருந்து ஆஸ்திரேலிய நிறுவனங்களால் முதலில் வாங்கப் பட்டுள்ளது மற்றும் முதலில் திருப்பி அளிக்கப்பட்டுள்ளது. அந்தச் சிலை தமிழ்நாட்டில் உள்ள கல்லிடைக் குறிச்சி கோவிலுக்குத் திருப்பி அளிக்கப்பட்டு, மக்கள் மற்றும் பக்தர்கள் ஊர்வலமாகச் சென்று மீண்டும் அச்சிலை கோவிலில் நிறுவினர்.

சம்பந்தர் நாயனார் சிலை

Photos : www.abc.net.au

சுபாஷ் தன்னைக் குற்றவாளி என்று இதுவரை ஒப்புக் கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் அவருக்கு உதவிய அமெரிக்கர் ஒருவர் தனது குற்றங்களை ஒப்புக் கொண்டுள்ளார்.

மீண்டு வந்த கலைப் பொருட்கள்

இதுவரை 4 முறை இது போன்ற கடத்தப்பட்ட கலைப் பொருட்களை ஆஸ்திரேலியாவின் தேசிய அருங்காட்சியகம், இந்தியாவில் உள்ள உரிய இடங்களுக்குத் திருப்பிக் கொடுத்துள்ளது.

2014-இல் திருப்பி அளிக்கப்பட்ட 600 ஆண்டுகள் பழமையான நடராசர் சிலைக்குப் பிறகு, மேலும் 5 கலைப் பொருட்களையும், இந்த ஆண்டு மேலும் 13 கலைப் பொருட்களையும், இந்தியாவிடம் அதிகாரப் பூர்வமாக ஆஸ்திரேலிய தேசிய அருங்காட்சியகம் அளித்துள்ளது. இன்னும் 3 கலைப் பொருட்கள், உரிய ஆவணங்கள் அளிக்கப்பட்டால், இந்தியாவிடம் திருப்பி ஒப்படைக்கப் படும் என்றும் கூறியுள்ளது.

போதி மரத்தடியில் இந்து வழிபாட்டில் ஈடுபடும் பெண்களின் சிற்பம்

Photos : www.abc.net.au

இந்தியாவைச் சேர்ந்த விஜயகுமார் என்னும் கலை மற்றும் தொல் பொருள் ஆர்வலர்தான், ஆஸ்திரேலிய அருங்காட்சியகத்தால் வாங்கப்பட்ட சிலை மற்றும் கலைப் பொருட்கள் கடத்தப்பட்டவை என்பதற்கான ஆதாரங்களைத் திரட்டி, அவற்றை மீட்பதற்கு உதவியுள்ளார்.

நட்ட ஈடு கோரிப் போராடும் அருங்காட்சியகம்:

2016 ஆம், நியூ யார்க் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில், ஆஸ்திரேலிய தேசிய அருங்காட்சியகங்களுக்கு, சுபாஷ் கபூர் நஷ்ட ஈடாக சுமார். 11 மில்லியன் டொலர்கள் அளிக்க வேண்டுமென தீர்ப்பளித்தது. சிலைக் கடத்தல் குற்றவாளி சுபாஷ் கபூருக்குக் கொடுத்த பெரும் பணத்தை திரும்பப் பெற அருங்காட்சியகங்கள் கடுமையாக முயற்சி செய்து வருகின்றன.

இது வரை திருப்பி அளிக்கப்பட்ட கலைப் பொருட்கள்

2021 - 6 சிலைகள், 6 நிழற்படங்கள் மற்றும் ஒரு ஓவியம் உள்ளடங்கிய 13 கலைப் பொருட்கள்.

2014 முதல் 2020 வரை - கற்சிலைகள் மற்றும் பாறை ஓவியம் உள்ளிட்ட 5 கலைப்பொருட்கள்.

2014 - கல்லிடைக்குறிச்சி வெண்கல நடராசர் சிலை.

ஒரு சர்வதேசப் பிரச்சினை:

ஆஸ்திரேலிய தேசிய அருங்காட்சியகங்களில் உள்ள இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கலைப் பொருட்கள் ஆசிய நாடுகளில் இருந்து கடத்தப்பட்டவை என்கிற குற்றச்சாட்டு இருக்கிறது.

2016-இல் க்ரென்னன் அறிக்கையின் படி, ஆஸ்திரேலிய தேசிய அருங்காட்சியகம், போதிய ஆராய்ச்சி செய்யாமல், கலைப் பொருட்களை உயர்ந்த விலை கொடுத்து வாங்கியுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளது. ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா - இரண்டு நாடுகளும் 1972 யுனெஸ்கோ உடன்படிக்கையின் படி, தங்கள் நாட்டில் உள்ள கடத்தப்பட்ட கலைப் பொருட்களை திருப்பி அளிக்க உறுதி அளித்துள்ளன.

இது போன்ற அவமானங்களை நிறுத்துவது எப்படி?

சமீபத்திய ஆண்டுகளில், அரசுகளும் அருங்காட்சியகங்களும், பாரம்பரியமிக்க மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கலைப் பொருட்கள், கடத்தப்பட்டவை என அறிந்தால், அதை மீட்டு உரிய இடத்தில் அளிக்க முயற்சி எடுத்து வருகின்றன.

5.1 மில்லியன் டொலர் பெறுமதியான சோழ சாம்ராஜ்ய காலத்து நடராஜர் சிலை

Photos : www.abc.net.au

இது போன்ற கடத்தப் பட்ட பொருட்களின் ஆதாரங்களை சரிபார்க்கும் கடுமையான போக்கால், ஆஸ்திரேலிய 2014 முதல் ஒவ்வொரு ஆண்டும், கடத்தப்பட்ட பொருட்களை திருப்பி அளித்துள்ளது.

ஆஸ்திரேலிய அருங்காட்சியகங்கள் தங்களிடம் எஞ்சியுள்ள கலைப் பொருட்கள் திருடப்படாதவை என நிரூபிக்க அனைத்து முயற்சிகளையும் ஆய்வுகளையும் எடுத்து வருகிறது. அதனால் எதிர்காலத்தில், ஏதாவது கலைப் பொருட்களை திருப்பிஅளிக்கும் சூழ்நிலை மீண்டும் எழாது என்பதையும் உறுதியாகச் சொல்ல முடியாது.

ஆஸ்திரேலியாவில் உள்ள அருங்காட்சியகங்கள், இது போன்ற கடத்தப்பட்ட கலைப் பொருட்களை கண்டுபிடிக்க ஒரு புதிய அணுகுமுறையை உருவாக்கி உள்ளதாக அறிவித்துள்ளது.

சமணத்துறவியின் சிற்பம்

Photos : www.abc.net.au

ஆஸ்திரேலியாவின் இந்த நல்லெண்ண செயல்பாட்டை இந்திய அரசாங்கம் வெகுவாகப் பாராட்டியுள்ளது. அதுமட்டுமில்லாமல், சர்வதேச அளவில் கடத்தப்பட்ட கலைப் பொருள்களை மீட்டெடுக்கும் ஒரு புதிய உத்வேகமும் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI

Chart 1. Tamil Speaking People in Australia, 1991-2016

Table 1. Tamil Speaking People by State and Territory*, 2011 and 2016

State/Territory	Tamil Speaking People		
	2011	2016	% Change
New South Wales	21,529	29,676	37.8%
Victoria	17,452	25,664	47.1%
Queensland	3,475	5,518	58.8%
Western Australia	4,079	6,890	68.9%
South Australia	1,703	2,699	58.5%
Tasmania	217	308	41.9%
Australian Capital Territory	1,416	1,885	33.1%
Northern Territory	278	514	84.9%
Australia	**50,153**	**73,162**	**45.9%**

Table 2. Tamil Speaking People by Country of Birth, 2011 and 2016

Country of Birth	Tamil Speaking People		
	2011	2016	% Change
India	17,500	28,055	60.3%
Sri Lanka	19,855	27,352	37.8%
Australia	6,547	9,979	52.4%
Malaysia	2,782	3,514	26.3%
Singapore	1,687	2,010	19.1%
New Zealand	260	341	31.2%
England	199	244	22.6%
UAE	104	153	47.1%
Other countries	1,217	1,514	24.4%
Total	**50,151**	**73,162**	**45.9%**

Chart 2. Tamil Speaking People by Religious Affiliation*, 2016



* Other category includes secular beliefs and inadequately stated responses.

Table 4. Gender distribution: Tamil Speaking People and Australia, 2016

Gender	Tamils	Australian
Male	53.3%	49.3%
Female	46.7%	50.7%

Table 3. Age distribution: Tamil Speaking People and Australia, 2016

Age Group	Tamils	Proportion	Australia	Proportion
0-4 years	4,835	6.6%	1,464,782	6.3%
5-9 years	4,987	6.8%	1,502,647	6.4%
10-14 years	3,689	5.0%	1,397,187	6.0%
15-19 years	3,008	4.1%	1,421,597	6.1%
20-24 years	4,174	5.7%	1,566,790	6.7%
25-29 years	7,023	9.6%	1,664,606	7.1%
30-34 years	9,980	13.6%	1,703,846	7.3%
35-39 years	9,246	12.6%	1,561,682	6.7%
40-44 years	6,324	8.6%	1,583,255	6.8%
45-49 years	4,586	6.3%	1,581,456	6.8%
50-54 years	4,085	5.6%	1,523,556	6.5%
55 years and above	11,225	15.3%	6,430,497	27.5%
Total	**73,162**	**100.0%**	**23,401,901**	**100.0%**

Chart 3. Tamil Speaking People densely populated suburbs in NSW, 2016



தமிழராக அடையாளப்படுத்தும் நாள்



● பொன்ராஜ் தங்கமணி

ஆஸ்திரேலிய கண்டத்தில் மனித குடியேற்றம் சுமார் 65 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கியதாக அறியப்படுகிறது. முதலில் குடியேறிய இவர்களை இந்த மண்ணின் பூர்வகுடி என்பார்கள். இந்தக் குடியேற்றம் தென்கிழக்கு ஆசியாவிலிருந்தும் நிலப் பாலங்கள் மற்றும் குறுகிய கடல் குறுக்குவெட்டுகள் மூலமும் நடந்து இருக்கலாம் என நம்பப்படுகிறது.

ஆஸ்திரேலிய டி.என்.ஏ வை ஆய்வு செய்த ஜெர்மனியைச் சேர்ந்த பரிணாம மானுடவியலுக்கான மேக்ஸ் பிளாங்க் நிறுவனம், சுமார் 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு ஒரு இடப்பெயர்வு நடந்துள்ளதாக கூறுகின்றது.

ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்கு முன்பாக ஐரோப்பியர்கள் ஆஸ்திரேலியாவிற்கு வந்திருந்தாலும், முறையான குடியேற்றம் என்பது பிரிட்டனைச் சார்ந்த ஜேம்ஸ் குக்கின் 1770ஆம் ஆண்டு வருகைக்குப் பிறகு ஏற்பட்டது எனலாம். ஆஸ்திரேலியாவின் பூர்வகுடி மக்கள்தொகை வெறும் 3.3 சதவீதம் (2016 கணக்கு) மட்டுமே ஆகும். இதன் காரணமாகவே ஆஸ்திரேலிய நாட்டை ஒரு குடியேற்ற நாடு என்பார்கள்.

1901 ஆம் ஆண்டு தொடங்கி 1973 வரை ஐரோப்பியர் அல்லாத இனத்தைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக ஆசியர்கள் மற்றும் பசுபிக் தீவுவாசிகள் ஆஸ்திரேலியாவுக்கு குடிபெயர்வதைத் தடைசெய்யும் “வெள்ளை ஆஸ்திரேலியா கொள்கை” என்ற சட்டம் இருந்ததை நாம் அறிவோம். அது விலக்கிக் கொள்ளப்பட்ட பின்னர் இந்தியா, இலங்கை மற்றும் பல நாடுகளில் இருந்து இங்கு பலர் இடம் பெயர்ந்தனர்.

இவ்வாறாக இடம் பெயர்ந்து இன்றளவு தங்களை தமிழர்கள் என அடையாளப் படுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை 73,162 என்கிறது 2016க்கான ஆஸ்திரேலிய மக்கள் தொகை கணக்கெடுப்பு. இதில் 40 வீதமானோர் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்திலும், 35 வீதமானோர் பேர் விக்டோரியாவிலும், 9.5வீதமானோர் மேற்கு ஆஸ்திரேலியாவிலும், 7.5 வீதமானோர் குயீன்ஸ்லாந்திலும், 3.7 வீதமானோர் தெற்கு ஆஸ்திரேலியாவிலும், 2.6 வீதமானோர் கான்பெராவிலும், மீதமுள்ளவர்கள் மற்ற மாநிலங்களிலும் வசிக்கிறார்கள். இந்த 73,162 பேரில், 13.4 வீதமானோர் ஆஸ்திரேலியாவில் பிறந்த தமிழர்கள், 86.4வீதமானோர் பேர் வேறு நாட்டில் பிறந்து இங்கு குடியேறிய தமிழர்கள்.

ஆஸ்திரேலியாவின் பதினெட்டாவது தேசிய மக்கள் தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பு வரும் ஆகஸ்ட் 10, 2021 அன்று நடைபெறுகிறது. இது ஆஸ்திரேலிய புள்ளிவிவரத் துறையால் நடத்தப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் தமிழ்ச் சமூகம் என்பது ஓரளவிற்கு நன்கு அறியப்பட்ட அடையாளமாக இருந்தாலும் நம் தமிழின மக்கள்தொகை என்பது இந்நாட்டின் மக்கள் தொகையின் அதிகாரப்பூர்வ எண்ணிக்கையில் 0.3 வீதம் (73,162 பேர்) மட்டுமே ஆகும்.

இருப்பினும் இந்த எண்ணிக்கையை விட அதிக தமிழர்கள் இருக்கக்கூடும் என்பது ஒரு கணிப்பு. அதற்கான உறுதியான சான்றுகள் இல்லை. தமிழர்கள் தங்களை அறியாமல் கணக்கெடுப்பு கேள்வியில் தவறாக பதில் அளிப்பதால் இந்த எண்ணிக்கை குறைவாகவே வருகிறது என்கிற வாதமும் தொடர்கிறது. எனவே இதைப் பற்றிய ஒரு விழிப்புணர்வு நம் சமூகத்தில் தேவைப்படுகிறது.

2011 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பில் இருந்த 50,153 தமிழர்கள் என்கிற எண்ணிக்கை 2016ஆம் ஆண்டு 45.9 வீதம் அதிகரித்து 2016 ஆம் ஆண்டு 73,162 ஆகி உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தக் கேள்வியின் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து அதற்கு சரியான பதில் அளித்தல் முக்கியம்.

கணக்கெடுப்பில் வரும் இரண்டு முக்கியமான கேள்விகளுக்கு தமிழ் என பதில் அளிப்பது அவசியம். உங்கள் வீட்டில் ஆங்கிலம் தவிர வேறு ஏதேனும் மொழி பேசுகிறீர்களா என்கிற கேள்விக்கு, Yes other(please specify) என தேர்ந்து எடுத்து தமிழ் (Tamil) என்கிற பதிலும், உங்கள் வம்சாவளி (ancestry) என்ன என்கிற கேள்விக்கு other ancestry (please specify) எனத் தேர்ந்து எடுத்து தமிழ் (Tamil) எனவும் பதில் அளிக்க வேண்டும். இந்தக் கேள்விகள் காகித கணக்கெடுப்பில் கேள்வி எண்கள் 20 மற்றும் 22ஆக வருகிறது. ஆனால், இணையதளத்தில் இந்த எண்களுடன் வராது. கடந்த முறை 65% இணைய தளத்தில் பதில் அளித்தார்கள். இந்த முறை கோவிட் நெருக்கடி காரணமாக 90%பேர் இணைய தளத்தில் பங்கு கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. கணக்கெடுப்பு நாளுக்கு 10 நாட்களுக்கு முன்னதாக, மக்கள் இதில் கலந்து கொள்ளலாம் என்கிற வசதி செய்து கொடுத்து உள்ளது பெரும் வரவேற்பு பெற்றுள்ளது.

தமிழர்கள் மலேசியா, தென் ஆப்ரிக்கா, நியூசிலாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் பிறந்து இங்கு குடியேறி உள்ளார்கள். தாங்கள் பிறந்த ஒரு நாட்டையும் வம்சாவளியோடு சேர்த்துக் கொள்வதில் எந்தப் பலனும் இல்லை. எடுத்துக்காட்டாக அரேபியத் தமிழர் என வகைப்படுத்தப்படும் போது ஒருங்கிணைந்த தமிழர் எண்ணிக்கையில் குறைந்து விடுகிறது. எனவே நாடுகள் சார்ந்து பிரிந்து இல்லாமல் தமிழர் என்கிற ஒற்றை அடையாளத்தில் நிற்பது பலம்.

மக்கள் ஆட்சி நடக்கும் ஆஸ்திரேலிய நாட்டில் சிறுபான்மை இனச் சமூகமாக வாழும் நம் தமிழ் இனத்தின் சரியான எண்ணிக்கை என்பது மிகவும் முக்கியம் ஆகும். தமிழ் மொழி பயில அரசு கொடுக்கும் நிதி, மொழி பெயர்பாளர்கள் சேவை, அரசு உதவி பெறும் தமிழ் வானொலிக்கு ஒதுக்கும் நேரம், நூலகத்தில் புத்தக ஒதுக்கீடு, விழாக்களுக்குச் சலுகைகள் என அனைத்து விதமான அரசு சார்பான முடிவுகளில் இந்த எண்ணிக்கை தான் பெரும்பங்கு வகிக்கும். இதில் அனைத்திலும், இது சார்ந்த வேலை வாய்ப்புகள் உள்ளன என்பதை கவனத்தில் கொள்ளவும். சரியான பதிலை நீங்கள் தேர்ந்து எடுத்து எழுதும் அதே வேளையில் இந்தச் செய்தியை உங்களின் நட்பு வட்டத்திலும் பகிர்ந்து நம் தமிழ் இன மக்களின் எண்ணிக்கையை உறுதி செய்வோம். ■

Chart 4. Tamil Speaking People densely populated suburbs in Victoria, 2016

Chart 5. Tamil Speaking People densely populated suburbs in Queensland, 2016



Chart 6. Tamil Speaking People densely populated suburbs in Western Australia, 2016



Chart 7. Tamil Speaking People densely populated suburbs in South Australia, 2016



Chart 8. Tamil Speaking People densely populated suburbs in Tasmania, 2016



Chart 9. Tamil Speaking People densely populated suburbs in the Australia Capital Territory, 2016



Chart 10. Tamil Speaking People densely populated suburbs in the Northern Territory, 2016



கருகிய மொட்டும் சந்திக்கு வந்த கொடூரங்களும்!

● எஸ். பிறை

என் மகளுக்கு நெருப்பு என்றாலே அவ்வளவு பயம். தீக்குச்சியை பற்றவைப்பதற்குகூட அச்சப்படுவாள். அப்படியானவள் ஒருபோதும் தீமூட்டி தற்கொலை செய்துகொண்டிருக்கமாட்டாள். அவளை யாராவது கொளுத்தியிருக்க வேண்டும். வாழ வேண்டிய தங்கத்தை, அழித்துவிட்டார்கள்....உண்மை கண்டறியப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்."

விழிநீர் சிந்தியபடியே இவ்வாறு உள்ளக் குமுறல்களையும், ஆதங்கங்களையும் வெளிப்படுத்தினார் நீதி நிவாரணத்தை எதிர்ப்பார்த்து காத்திருக்கும் ஹிஷாலினியின் தந்தையான ஜெயராஜ் ஜூட் குமார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனின் வீட்டில், பணிப்பெண்ணாகன முறையில் உயிரிழந்த பெருந்துயர் சம்பவமானது முழு இலங்கையையுமே அதிர வைத்துள்ளது.

கண்ணீர் சிந்தல், கவலை தெரிவிப்பு, இரங்கல் கூட்டமென ஒரு புறம் சோக மேகம் சூழ்ந்துகொண்டாலும், மறுபுறத்தில் நீதிகோரி போராட்டங்கள், கண்டன அறிக்கைகள், மகஜர் கையளிப்புகள் போன்ற நடவடிக்கைகளும் இடம்பெற்றுவருகின்றன.

எழில்கொஞ்சும் மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்திலுள்ள டயகம, 3ஆம் பிரிவு தோட்டத்திலேயே கடைசியாக ஹிஷாலினி வாழ்ந்துள்ளார். 2004 நவம்பர் 12 ஆம் திகதி கொழும்பில் பிறந்த ஹிஷாலினிக்கு ஒரு அண்ணன், ஒரு அக்கா, மூன்று தங்கைமார் உள்ளனர்.

தாய், தந்தை, அண்ணன் மற்றும் அக்கா ஆகியோர் கொழும்பு இராஜகிரிய பகுதியில் வாடகை வீடொன்றில் தங்கியிருந்த காலப்பகுதியிலேயே ஹிஷாலினி பிறந்துள்ளார். வாழ்க்கைச்செலவு உட்பட இதர காரணங்களால் காலப்போக்கில் கொழும்பில் இருந்து இடம்பெயர்ந்தனர்.

பூண்டுலோயா பகுதியில் சிறுதி காலம் வாழ்ந்த பின்னர் அவிசாவளை நோக்கிசென்று அங்கு சிறிது காலம் வாடகை வீட்டில் தங்கினர். தரம் 2வரை பூண்டுலோயாவில் கல்வி கற்ற ஹிஷாலினி அதன்பின்னர் தரம் ஏழு வரை அவிசாவளையில் கல்வி பயின்றார். அங்கும் அவர்கள் நீடித்துநிலைக்கவில்லை. இறுதியில் ஹிஷாலினியின் தாயான ரஞ்சனியின் பிறப்பிடமான டயகம 3 ஆம் பிரிவு தோட்டத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு குடியேறினர்.

வீட்டில் மொத்தம் எட்டு பேர். தந்தையின் வறுமானத்திலேயே வாழ்வாதாரம் முழுமையாக தங்கியிருந்தது. இதனால் ஹிஷாலினியின் அண்ணனுக்கும் கல்வியை இடைநடுவில் கைவிட்டு 16 வயதிலேயே வேலைக்கு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. தாய் வீட்டில் இருந்து பிள்ளைகளை கவனித்து வந்துள்ளார். வறுமையால் ஹிஷாலினியும் 7 ஆம் தரத்துக்கு பிறகு கல்வி கற்கவில்லை.

கொழும்பிலிருந்து தந்தையும், அண்ணனும் அனுப்பும் பணத்தை நம்பி வாழ்ந்த ஹிஷாலினியின் குடும்பத்துக்கும் கொரோனா நெருக்கடி பேரிடியாக மாறியது. ஊரடங்கு உத்தரவு, பயணத்தடை உள்ளிட்டவையால் தந்தையும், அண்ணனும் தொழில் இழந்தனர். டயகம திரும்பி வீட்டிலேயே தங்கினர்.

உணவு தேவையக்கூட பூர்த்திசெய்ய வழி இல்லாததால் கடன் பொறிக்குள் சிக்கினார் ஹிஷாலினியின் தாயான ரஞ்சனி. ஹிஷாலினியின் தலைவிதியே இங்குதான் மாறியது என்றுகூட சொல்லாம். தாய் வழங்கிய வாக்குமூலம் ஊடாக இது உறுதியானது.

"கொரோனா காலத்தில் எனது கணவருக்கும் மகனுக்கும் வேலை இல்லாமல்போனதால் சீவியத்துக்காக ஒவ்வொரு இடத்திலும் கடன் வாங்க வேண்டியிருந்தது.மகளை வீட்டுப் பணிக்காக அழைத்துச் சென்ற தரகரிடமும் நகையை அடகு வைத்து 30,000 ரூபா பணத்தைப் பெற்றோம். உரிய காலத்துக்குள் கடனை அடைக்க முடியவில்லை. நெருக்கடி நிலை தொடர்ந்தது.

இந்நிலையில் வீட்டு வேலைக்கு ஆள் தேவை என்ற தகவலை தரகர் வழங்கினார். வேலைக்கு செல்வதற்கு நான் தயாரானேன். பிள்ளைகள் இருப்பதால் என்னை இருக்குமாறும், மகள்களில் ஒருவரை அனுப்புமாறும் கோரினர். அப்போதுதான் ஹிஷாலினி தாமாக முன்வந்து, கடன் காரர்கள் வீட்டுக்கு வந்து பிரச்சினை செய்வார்கள், நான் வேலைக்கு சென்று கடனை அடைக்கின்றேன் என சொன்னார். தரகரின் மகளும் குறித்த வீட்டில் வேலை செய்திருந்ததால் நம்பி அனுப்பினோம்." - என்றார் தாய் ரஞ்சனி.

2020 ஒக்டோபர் மாதமே ரிஷாட்டின் வீட்டுக்கு ஹிஷாலினி வேலைக்குச் சென்றுள்ளார். மாத சம்பளமாக 20 ஆயிரம் ரூபா பேசப்பட்டுள்ளது.

மலையக பெருந்தோட்டப் பகுதிக்கு முன்னர் திடீரென சிலர் காரில் வருவார்கள், அவர்கள் யாரென்றுகூட தெரியாது, அவர்களை நம்பி பிள்ளைகளை பெற்றோர் அனுப்பிய சம்பவங்கள் பல. அப்போது ஆரம்பத்தில் 2 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. காலப்போக்கில்தான் தரகர்கள் உருவாகினர். தொழில் பாதுகாப்பு உட்பட எந்தவொரு காரணம் பற்றியும் அவர்கள் சிந்திப்பதில்லை. கொழும்பில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தால்போதும், மறுநாளே வேலைக்கு ஆட்களை அழைத்துச்சென்றுவிடுவார்கள். இதற்காக அவர்களுக்கு ஒரு தொகை கொடுப்பனவு வழங்கப்படும். 2000 காலப்பகுதியில் 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. தற்போது எஜமான்கள் 10 ஆயிரம் வழங்கும் நிலையில், தொழிலுக்கு செல்பவர்களும் முதல் மாத சம்பளத்தில் தரகர்களை கவனிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

மாத சம்பளம் 20 ஆயிரம் ரூபா நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், நான்கு கட்டங்களில் ஹிஷாலினியின் தாய்க்கு சுமார் 2 லட்சம் ரூபாவரை வழங்கப்பட்டுள்ளது. இதனை அவரும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

வாரம் ஒருமுறை அல்லது இருந்திருந்து எப்போதாவது தான் தங்கை கதைப்பார். ரிஷாட் பதியுதீனின் வீட்டு ஆக்களின் இலக்கம் எமக்கு தெரியாது. அங்கு வேலை செய்யும் ஒருவரின் தொலைபேசியில் இருந்துதான் தங்கை அழைப்பை ஏற்படுத்துவார் என ஹிஷாலினியின் சகோதரன் தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI

கருகிய மொட்டும் சந்திக்கு வந்த கொடூரங்களும்!

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

நவம்பர் மாதம் வேலைக்குசென்ற ஹிஷாலினி இதற்கு இடைப்பட்ட காலத்தில் ஒருநாள்கூட வீட்டுக்கு வந்ததில்லை. அவரை சந்திப்பதற்கு ஒரு தடவை சென்றிருந்தபோதுகூட புத்தளம் சென்றுவிட்டார் எனக்கூறப்பட்டது. இதனால் தொலைபேசி உரையாடல் மட்டுமே தொடர்ந்தது என விபரித்தார் ஹிஷாலினியின் அண்ணன்.

சம்பவம் நடைபெறுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் தங்கையிடமிருந்து வந்த அழைப்பின்போது அங்கு வேலை செய்யும் ஒருவர் தன்னை தும்பு தடியால் தாக்குவதாக கூறினார் என்று அம்மா சொன்னார்.

தனது மகளிடமிருந்து வந்த தொலைபேசி அழைப்பின்போது கலந்துரையாடப்பட்ட விடயம் குறித்து தகவல் வெளியிட்டா ஹிஷாலியின் தாய்,

" ஸ்பீக்கரில் போட்டோ கதைத்தனர். வேலை செய்பவர் தும்புத்தடியால் அடிப்பதாக மகள் கூறினாள். பணத்தை களவாடிவிட்டார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது எனவும் குறிப்பிட்டார். மகளை அடிக்க வேண்டாம் என மெடத்திடம் குறிப்பிட்டேன். அப்போது மெடத்துடன் வாயடிப்பதாகவும், மெதுவாக வேலை செய்வதாகவும் அங்கு வேலை செய்யும் இளைஞர் கூறினார். அதை கேட்ட பின்னர் மகளை அங்கு வைத்திருக்க விரும்பவில்லை. அப்போது மெடத்திடம் (ரிஷாட்டின் மனைவியிடம்) எனது பிள்ளையை வீட்டுக்கு அழைத்துவர 07 ஆம் திகதி முடக்க நிலை தளர்த்தப்பட்டவுடன் வருவதாக கூறினேன். மகளை அடிக்க வேண்டாம் எனவும் குறிப்பிட்டேன். அதற்கு அவர்களும் சம்மதம் தெரிவித்தனர். எனினும், பயணத்தடை தளர்த்தப்படாததால் போக முடியாமல்போனது." - என்றார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஜூலை 3 ஆம் திகதி திடீரென தீக்காயங்களுக்குள்ளாகியுள்ளார் ஹிஷாலினி. அவரை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது உடலில் 72 வீதம் எரிகாயங்களுக்குள்ளாகியிருந்தது. இதனால் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவர் உயிர்பிழைப்பது கடினம் என்பதை ஆரம்பத்திலேயே வைத்தியர்கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

கொழும்பிலிருந்து வந்த தொலைபேசி அழைப்பையடுத்து ஜூலை 4 ஆம் திகதி ஹிஷாலினியின் பெற்றோர் கொழும்பு வந்துள்ளனர். மகள் ஐ.சி.யூவில் இருப்பதைக் கண்டு கதறி அழுதுள்ளனர். எப்படியோ ஏற்பட்டால் விபத்தால் இப்படி நடந்துள்ளது என ரிஷாட்டின் வீட்டார் குறிப்பிட்டுள்ளனர். பொரளை பொலிஸாரே ஆரம்பத்தில் விசாரணையை முன்னெடுத்தனர். எனினும், அந்த விசாரணை நம்பகரமானதாக அமையவில்லை என தமிழ் அரசியல் பிரமுகர்கள் குறிப்பிடுகின்றனர். உரிய விசாரணையின்றியே தற்கொலை என்ற முடிவுக்கு பொரளை பொலிஸார் வந்தது எப்படி என கேள்வி எழுப்பும், மலையக அரசியல்வாதிகள், குறித்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை விசாரணையில் இருந்து அகற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

சம்பவம் ஜூலை 3 ஆம் திகதி நடைபெற ஜூலை 15 ஆம் திகதியே ஹிஷாலினி சிகிச்சைப்பலனின்றி உயிரிழந்தார். அதுவரை ஹிஷாலினியின் உறவினர்கள் மௌனமாகவே இருந்தனர். பொலிஸ் நிலையத்தில்கூட முறைப்பாடொன்றை பதிவுசெய்யப்படவில்லை. ஏனெனில் வெளிநாட்டில் இருந்து உடலுக்கு பொருத்துவதற்கு தோள் கொண்டுவரப்படுகின்றது, சிகிச்சைக்கான முழு பொறுப்பும் ஏற்கப்படும் என ரிஷாட் வீட்டு தரப்பில் இருந்து வழங்கிய உறுதிமொழியால் அவர்கள் மௌனம் காத்திருக்ககூடும் என்பதை உறவினர்கள் வெளியிட்ட கருத்துமூலம் அறியமுடிந்தது.

ஹிஷாலினி மரணமடைந்த பின்னர் அவரின் இழப்பு சமூகப்பிரச்சினையாகவும், சட்ட ஒழுங்கு பிரச்சினையாகவும் மாறியது. ஊடகங்களும் குறித்த சம்பவத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தன. பிரதேச சபை முதல் அதிஉயர் சபையான நாடாளுமன்றம்வரை இது பற்றி பேசப்பட்டது. பொலிஸ் திணைக்களமும் புருவத்தை உயர்த்தியது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிடமும் முறைப்பாடுகள் குவிந்தன.

"16 வயதுவரை சிறார்களுக்கு கல்வி கட்கும் உரிமை இருக்கின்றது. அதனை தடுப்பது சிறுவர் வன்முறையாகவே கருதப்படும். எனவே, இச்சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணையை மேற்கொண்டு இரு வாரங்களில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு குறிப்பிட்டுள்ளோம். அந்த அறிக்கையின் பிரகாரம் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் இடம்பெறும்." - என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார்.

ஹிஷாலினி நீண்ட காலமாக பாலியல் ரீதியில் துன்புறுத்தப்பட்டுள்ளார் என மரண பரிசோதனை அறிக்கையில் தெரியவந்துள்ளது.

பொரளை பொலிஸாருக்கு மேலதிகமாக இரு விசேட குழுக்கள் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றன. டயகம பகுதிக்கும், அவிசாவளை பகுதிக்கும் சென்று ஹிஷாலினியின் குடும்ப பின்புலம், அவர்களின் கடந்தகாலம் என்பது உட்பட பல விடயங்களை பொலிஸார் ஆராய்ந்துவருகின்றனர். வாக்குமூலங்களும் பெறப்பட்டுவருகின்றன.

அதேபோல 2020 நவம்பர் முதல் ரிஷாட் பதியுதீனின் வீட்டுக்கு வருகை தந்தவர்கள் உட்பட அனைத்து விவரங்களையும் பொலிஸார் திரட்டிவருகின்றனர். ரிஷாட் பதியுதீனின் மனைவி, அவரின் வீட்டில் வேலை செய்த இளைஞன் உட்பட நால்வரின் தொலைபேசி அழைப்புகள் தொடர்பான தகவல்களும் விசாரணைகளுக்காக திரட்டப்படவுள்ளன. வங்கிக்கணக்குகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றன.

ஹிஷானி தீ மூட்டி தற்கொலை செய்துகொண்டிருந்தால் அதற்கு தூண்டுதலாக அமைந்த காரணிகள், பின்புலம் பற்றி ஆராயும் பொலிஸார், சில தகவல்களை மறைப்படிதற்காக சிறுமி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணைகளை நகர்த்த வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

மலையகத்திலிருந்து வீட்டு வேலைக்கு செல்லும் சிறார்கள் இவ்வாறு பல அனர்த்தங்களை கடந்த காலங்களில் சந்தித்துள்ளனர். அவை உரியவகையில் வெளிச்சத்துக்கு வரவில்லை. நீதிக்காக குரல் கொடுக்கவும் அரசியல் பிரமுகர்கள் முன்வரவில்லை. தற்போது விடயம் பூதாகரமாகியுள்ளது. இதன் காரணமாகவே அரசியலும் புகுந்து விளையாடுகின்றது. மரணத்தில் அரசியல் நடத்துவதைவிடவும், நீதி நிவாரணத்தை பெற்றுக்கொடுப்பதும், மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதுமே சமூகத்துக்கான அரசியலாகும்.

" சிறு வயதில் மகளை வேலைக்கு அனுப்பியது தவறு தான். அதற்காக என்ன தண்டனையை வேண்டுமானாலும் ஏற்கின்றேன். அதேபோல எனது மகளின் மரணத்துக்கு நீதி வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். " - என கண்ணீர்மல்க ஹிஷாலினியின் தாயார் வேண்டுகோள் விடுக்கின்றார். இது விடயத்தில் நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்பதே அனைத்து தரப்பினரதும் கருத்தாகும்.

இச்சம்பவத்தின் பின்னர் இவ்விவகாரம் தொடர்பில் ஐக்கிய மனித உரிமைகள் ஆராய்ந்துள்ளது. பெற்றோர், பொலிஸார் மற்றும் இதர தரப்புகளிடம் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக்கொண்டு இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மேற்படி அமைப்பின் பணிப்பாளர் பிரனிதா வர்ணகுலசூரிய,

" ஹிஷாலினியை சந்திப்பதற்கு அவரின் தாய் 4 தடவைகள் கொழும்பு வந்துள்ளார். இரு தடவைகள் ரிஷாட்டின் வீடுதேடி சென்றுள்ளார். ஆனாலும், புளத்தளம் சென்றுவிட்டார் என கூறப்பட்டுள்ளது. சனி அல்லது ஞாயிறு நாட்களில் ஐந்து நிமிடமே அதாவது அவுட் ஸ்பீக்கர் போட்டே ஹிஷாலினி வீட்டாருடன் பேச வேண்டிய நிலை இருந்துள்ளது. இதனால் தனக்கு நடப்பவற்றை ஹிஷாலினி கூறாமல் இருந்திருக்கலாம்.

அதுமட்டுமல்ல சிறுமியை வேலைக்கு அழைத்துச்சென்ற பொன்னையா என்பவருக்கு அழைப்பை ஏற்படுத்தியே அவர் மூலம் தாயுடன் கதைத்துள்ளனர். அப்போதுதான் தன்னை தும்பு தடியால் இளைஞர் தாக்கிய விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

தான் ஜூலை 7 ஆம் திகதி அங்கு வருவதாகவும், அதன் பின்னர் அங்கு வேலை செய்வதாகவும், மகளை அனுப்புமாறும் ஹிஷாலினியின் தாயார் குறிப்பிட்டுள்ளார். அவர் செல்வதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர்தான் சம்பவம் நடைபெற்றுள்ளது.

ரிஷாட்டின் வீட்டின் பின்புறத்தில் உள்ள அறையொன்றிலேயே ஹிஷாலினி தங்கவைக்கப்பட்டிருந்தார் எனவும் கூறப்படுகின்றது. ஆடையை பொசுக்குவதற்கு முற்பட்ட வேளையிலேயே தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என ரிஷாட் வீட்டு தரப்பு குறிப்பிட்டுள்ளது. இதன் உண்மை தன்மையை பொலிஸார்தான் கண்டுபிடிக்க வேண்டும். ஆனால் விசாரணைகள் உரிய வகையில் இடம்பெறுமா என்ற சந்தேகம் எமக்கு உள்ளது.

சிறுமி தற்கொலை செய்துகொண்டார் எனக்கூறுகின்றனர். அதுகூட கொலைதான். அவரை தற்கொலைக்கு தூண்டிய காரணங்கள் கண்டறியப்பட வேண்டும்."- என்றார்.

ஹிஷாலினியின் மரணத்தின் பின்னர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் அரங்கேறிய பல கொடூரங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. 2009 முதல் இதுவரை ரிஷாட் பதியுதீனின் வீட்டில் 11 பெண்கள் வேலை செய்துள்ளனர். இதில் இருவர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் விபத்தில் உயிரிழந்துள்ளார். மற்றையவர் புற்றுநோயால் உயிரிழந்துள்ளார். ஹிஷாலினியும் தற்போது இல்லை. ஏனைய 8 பெண்களிடம் பொலிஸார் வாக்குமூலங்களை பதிவுசெய்தனர். இதன்போது தாம் பாலியர் ரீதியில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என இரு பெண்கள் குறிப்பிட்டுள்ளனர். ரிஷாட்டின் மனைவியின் சகோதரரே இந்த கொடூரச்செயலில் ஈடுபட்டுள்ளார். அவர் தற்போது சிறையில் உள்ளார். அதேபோல மலசலகூடத்தை முறையாக கழுவாவிட்டால், கொமட்டில் மூஞ்சை தணித்து ரிஷாட்டின் மனைவி தாக்குவார் என மேலும் சிலர் பொலிஸ் விசாரணையின்போது தகவல் வெளியிட்டுள்ளனர்.

ஹிஷாலினியின் பிரேதம்மீது மீண்டும் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது. அதன் முழுமையான விவரம் விரைவில் வெளியாகும். அதன்பின்னர் ஏனைய சில விடயங்களும் வெளிச்சத்துக்கு வரும் என கூறப்படுகின்றது.

H.N. PAWN BROKER
எச்.என். அடகு கடை

- குறைந்த வட்டி வீதம்
- நம்பிக்கை மிகுந்த ஒரே இடம்
- சேவைக்கட்டணம் இல்லை
- சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

தங்கப்பவுணுக்கு அதிகூடிய முற்பணம் வழங்கப்படும்

வட்டி 3%

Hub Arcade, 28/15-23 Langhorne St, Dandenong VIC 3175
Tel/Fax : 03 8712 1406, Ruban : 0423 094 478

நம்பிக்கையில் வாடிக்கையாளர்களின்
மனதில் இடம் பிடித்த -
10 வருடகால அனுபவமுள்ள...

PERPETUA TRADE

Money Transfer Worldwide

We Guarantee the best rate for
SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE

- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVINIENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

COMMERCIAL BANK | BOC | PEOPLE'S BANK | SEYLAN BANK PLC | HNB | சம்பத் வங்கி SampathBank | NSB National Savings Bank | cash Xpress

Send Money to any Bank In Sri Lanka

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478 - Email: pmoneytransfer@ymail.com

தமிழரின் தொன்மையை ஆராய கீழடி ஆய்வு அவசியம்

● அ.முத்துக்கிருஷ்ணன்

துக்ளக் வார இதழில், துர்வாசகர் என்னும் பெயரில் தனது சொந்த பெயரை வெளியிட தைரியம் இல்லாத ஒருவர் கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிறார், இந்த அளவுக்கு அகழாய்வுக்காக பணம் செலவிடப்படுவது தேவையற்றது. கொரோனா காலத்தில் மக்கள் கஷ்டப்படும் நிலையில் இந்த மாதிரி அகழாய்வுப் பணிகள் தேவைதானா என்கிற அளவில் கீழடி ஆய்வை கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது. இந்த கேள்விக்கு பதில் காணும் முன் கீழடி என்றால் என்ன என்பதை நாம் ஒரு பார்வை பார்க்கலாம்.

இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை 2013-14 ஆம் ஆண்டில் வைகை நதிக்கரையில் ஒரு ஆய்வை மேற்கொண்டது. வெள்ளிமலையில் தொடங்கி தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களின் வழியே 250 கிமீ தூரம் ஓடும் வைகை நதியின் இருகரைகளிலும் உள்ள 400 கிராமங்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஒரு ஆண்டு முழுவதும் இந்த 400 கிராமங்களில் அலைந்து திரிந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் அவர்கள் 263 புதை மேடுகளையும் 90 வாழ்விடங்களையும் இனம் கண்டார்கள். அதில் வாழ்விடங்களான கீழடி, மாரநாடு, சித்தர் நத்தம், டொம்பச்சேரி, அல்லிநகரம், ராஜகம்பீரம், பாண்டிக்கண்மாய், அரசநகரி ஆகிய இடங்களை பரிசீலித்து அதில் கீழடி, மாரநாடு, சித்தர் நத்தம் ஆகிய மூன்று கிராமங்களை தங்களின் அடுத்த கட்ட ஆய்விற்கு இந்தக் குழுவினர் தேர்வு செய்தனர்.

கீழடி, கொந்தகை, மணலூர் ஆகிய மூன்று கிராமங்களின் எல்லைகளுள் ஒரு தொல்லியல் மேடு இருப்பதை குழுவினர் கண்டறிந்தனர். இந்த தொல்லியல் மேட்டின் பெயர் தான் பள்ளிச்சந்தை திடல். இந்த பள்ளிச்சந்தை திடலைத் தான் தங்களின் ஆய்வுக் களமாக முடிவு செய்து இங்கே அகழ்வாய்வை மேற்கொள்ள இந்திய தொல்லியல் துறை முடிவு செய்தது.

கீழடியில் அகழாய்வுகள் தொடங்கிய நாளில் இருந்தே நமக்கு அந்த நிலம் ஆச்சரியங்களை வழங்கியபடி இருக்கிறது. அங்கு கிடைத்த பொருட்களை வைத்து அங்கு வாழ்ந்தவர்கள் ஒரு வேளாண் சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்பதும், அவர்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதையும் தெளிவுபடக் கூறலாம். அவர்களின் வசிப்பிடங்களில் பாவிக்கப்பட்ட கட்டுமானப் பொருட்கள் நமக்கு கிடைத்துள்ளது. செங்கற்கள், சுண்ணாம்பு சார்ந்த கூரை ஓடுகள், சுடுமண்ணாலான உறைகிணறுகள், இரும்பு ஆணிகள் கிடைத்துள்ளன.

கீழடியில் கிடைத்த பானைகளில் உள்ள கீறல் குறியீடுகள், தமிழி எழுத்துக்கள் சங்க காலத் தமிழர்களின் எழுத்தறிவை நமக்கு பறைச்சாற்றுகிறது. ‘ஆதன்’, ‘உதிரன்’, ‘திசன்’, ‘குவிரன் ஆத(ன்)’ போன்ற பெயர்களைக் குறிப்பிடும் தமிழி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மண்பாண்ட ஓடுகளும் கிடைத்துள்ளன. தாமிரத்தாலான கண் மை தீட்டும் குச்சி, இரும்பாலான அம்பு முனைகள், எழுத்தாணி, சுடுமண் முத்திரைக் கட்டைகள் உட்பட பல்வேறு அரிய தொல்பொருட்கள் கிடைத்துள்ளன.

அங்கு கிடைத்த சில கைவினைப் பொருட்கள், அவர்கள் கைவினைத் தொழில்களில் தேர்ந்தவர்களாக இருந்தார்கள் என்பதை நிறுவுகிறது. தக்களிகள், எலும்பினாலான கூர்முனைகள், அரவைக் கல், தந்தத்தினாலான சீப்புகள், நீள் கழுத்து நீர்க்குடுவைகள், மணி வகைகள் என ஏராளமான பொருட்கள் அவர்களின் தொழில் சார் நடவடிக்கைகளையும், கைவினை புலமையையும், வாழ்வியலையும் நமக்கு உணர்த்துகிறது.

கீழடியில் வாழ்ந்த பண்டைய மக்களின் வாழ்க்கை முறையை அங்கு கிடைத்த மதிப்பான அணிகலன்களின் வழியே காண முடிகிறது. தங்கத்தினாலான தொங்கட்டான், மணி, தகடு, வளையம், கண்ணாடி மணிகள் என அழகிய அணிகலன்கள் கிடைத்துள்ளன.

பண்டைய மக்களின் விளையாட்டு பொருட்களும் நமக்கு அகழாய்வில் கிடைத்துள்ளன. பகடைக்காய்கள், வட்டச்சில்லுகள், ஆட்டக்காய்கள், தந்தத்தினாலான தாயக்கட்டை என நமக்கு அங்கு பல முக்கிய சான்றுகள் கிடைத்துள்ளன.

ஒரு நகரத்திற்கு நீர் வழங்குதலும் கழிவுநீர் அகற்றலும் நாகரீக வளர்ச்சியின் முக்கிய அம்சங்களாகக் கருதப்பட்டன. கீழடியில் சுடுமண் குழாய்களால் அமைக்கப்பட்ட கழிவு நீர் கால்வாய் வசதியுடன் கட்டிடங்கள் இருந்தன என்று கண்டறியப் பட்டுள்ளது. மூன்று உறைகிணறுகள் வெவ்வேறு மட்டங்களில் கிடைத்துள்ளன, இதைப் பொறுத்து அந்த காலத்தில் இருந்த நீர் மட்டங்களின் உயரத்தை கணிக்க முடிகிறது.

வரலாற்றின் தொடக்ககாலத்தைச் சேர்ந்த கருப்பு, சிவப்பு மண்பாண்ட ஓடுகள், வெள்ளை வண்ணம் பூசப்பட்ட கருப்பு சிவப்பு மண்பாண்டத் துண்டுகள், செம்பழுப்பு நிற கலவை பூசப்பட்ட மண்பாண்டத் துண்டுகள் ஆகியவையும் கிடைத்துள்ளன. தமிழகத்தில் செம்பழுப்பு நிற ரசட் (russet)கலவை பூசப்பட்ட பாண்டங்கள் இதுவரை கொங்குப் பகுதியில் மட்டுமே கிடைத்திருப்பதைக் கொண்டு இப்பகுதி கொங்குப் பகுதியுடனும் வாணிபத் தொடர்பிலிருந்ததாகவும் அறிஞர்கள் கருதுகிறார்கள்.

கீழடியில் உள்ள கட்டிடங்களின் தரைத்தளங்களும், நீண்டு செல்லும் மதில் சுவர்களும் நகர நாகரிகத்திற்கு வேண்டிய அனைத்து கட்டடமைப்புகளையும் இந்த நகரம் கொண்டிருந்தது என்பதை உறுதிப்படுத்துகிறது. 2018ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நான்காம் கட்ட அகழாய்வின் போது சேகரிக்கப்பட்ட ஆறு கரிம மாதிரிகள், அமெரிக்க நாட்டின் புளோரிடா மாகாணம் மியாமி நகரத்தில் அமைந்துள்ள பீட்டா பகுப்பாய்வு சோதனை ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டன, ஆறு கரிம மாதிரிகளின் காலம் கிமு 6-ஆம் நூற்றாண்டிற்கும் கிமு 3-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதாகும். 353 செமீ ஆழத்தில் கிடைத்த இந்த கரிமத்தின் காலம் கிமு 6-ஆம் நூற்றாண்டு என்றும் 200 செமீ ஆழத்தில் சேகரிக்கப்பட்ட மற்றொரு கரிமத்தின் காலம் கிமு 3-ஆம் நூற்றாண்டு என்றும் காலம் கணிக்கப்பட்டது.

கீழடி அகழ்வாய்வில் ஆயிரக்கணக்கான பொருட்களை உறைந்த நிலையில் காலம் பாதுகாத்து நம்மிடம் வழங்கியிருக்கிறது. மதுரை உலக தமிழ்ச் சங்கத்தில் இந்த பொருட்களின் பெரும் கண்காட்சி நடைபெற்றது. இப்பொது கீழடியில் தொல்லியல் துறையின் சார்பாக பெரும் அருங்காட்சியகம் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளது. இங்கே ஒரு உலகத்தரமான தொல்லியல் அருங்காட்சியகம் மதுரையின் ஒரு மகுடமாக அமையவிருக்கிறது. இதை நாம் மட்டும் கண்டுகளித்தால் போதாது இந்த பொருட்களுக்கு இனி சிறகு முளைத்து அது இந்தியாவின் பல பாகங்களுக்கு பறக்கத் தொடங்க வேண்டிய நேரமிது. உலகப் புகழ்பெற்ற ஓவியர்களின் ஓவியங்கள் உலகம் முழுவதும் சென்று கண்காட்சிக்கு வைக்கப்படுவது போல் கீழடி தொடங்கி தமிழர் நாகரீகத்தின் சான்றுகள் உலகம் முழுவதும் சென்று காட்சிக்கு வைக்கப்பட வேண்டும்.

நம் குழந்தைகள் இனி எத்தனை காலம் தான் உலக அரசியல்களை பற்றியே பாடம் படிப்பது, இனி அவர்கள் நம் நிலத்தில் உள்ள அதிசயங்களை பற்றியும் கற்க வேண்டும். நம் பள்ளி கல்லூரி மாணவர்கள் இனி வருடம் தோறும் மதுரையை சுற்றி உள்ள பாறை ஓவியங்களை, கல்வெட்டுகளை, சமணர் படுகைகளை-குகைகளை, அகழாய்வுத் தளங்களை, புராதனச் சின்னங்களை சென்று பார்க்க வேண்டும். நம் பண்பாட்டின், மொழியின், நாகரீகத்தின் போற்றத்தக்க விழுமியங்களை அறிய வேண்டும், நம் பிள்ளைகள் நாம் ஒரு மூத்த நாகரீகத்தின் தொடர்ச்சி என்கிற பெருமிதத்துடன் உலகம் முழுவதும் வலம் வர வேண்டும்.

அரிக்கமேடு, அழகன்குளம், காவேரிப்பட்டினம், உறையூர், கரூர், கொடுமணல், தாண்டிக்குடி, கொற்கை, ஆதிச்சநல்லூர், முசிறிப்பட்டினம் என இவை எல்லாம் நம் பண்பாட்டின் முத்திரைகளை தாங்கி நின்ற நிலங்கள், இந்த இடங்கள் எல்லாம் நாம் செல்லும் சுற்றுலா தளங்களாக மாற வேண்டும், இந்த ஒவ்வொரு இடத்திலும் ஒரு அருங்காட்சியகம் அமைக்கப்பட வேண்டும். நம் பண்பாட்டின் இந்த விலைமதிப்பிட முடியாத பொக்கிசங்களைப் பற்றி நம் குழந்தைகளின் பாட புத்தகங்களில் இடம் பெற வேண்டும்.

கீழடிக்கும் சிந்துவெளி நாகரிகத்திற்குமான தொடர்புகள் பற்றி இன்னும் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கீழடி மற்றும் தமிழகமெங்கும் கிடைத்த பொக்கிஷங்கள் நம் சங்க இலக்கியங்களில் வரும் விவரணைகள் பலவற்றுடன் துல்லியமாக ஒத்துப் போகிறது. சங்க இலக்கியங்கள் வெறும் புனைவு அல்ல அவை இந்த நாகரீகத்தின் வாழ்வின் இருந்து முகிழ்த்தவை என்பது நிரூபணமாகி வரும் காலமிது. கீழடி பாண்டியர்களின் தொல்நகரான “பெருமணலூராக” இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

மதுரையின் வரலாற்றை கடந்த 27 வாரங்களாக காட்சிப்படுத்தும் தூங்காநகர நினைவுகள் எனும் இந்தத் தொடர் நெடுகிலும் புனைவுகளை நான் எங்கும் துணைக்கு அழைக்கவில்லை மாறாக பாறை ஓவியங்கள், கல்வெட்டுகள் முதல் அகழாய்வுகள் வரை எல்லாம் இன்றைய உலகம் ஏற்கும் அறிவியல் சான்றுகளின் வழியே தான் இந்த தொடர் பயணிக்கிறது.

இந்த தொடரில் நாம் பயணித்து வந்த சங்க கால மதுரை அச்சு அசலாக நமக்கு கீழடியில் கிடைத்துள்ளது என்பது கூடுதல் பெருமிதமே, கீழடியில் நம் பண்டைய மக்கள் இயற்கையை வணங்கியிருக்கிறார்கள், சாதிய ஏற்றத்தாழ்வுகளற்ற சமூகமாக அது இருந்துள்ளது. உலகின் மூத்த நகரங்களில் ஒன்றாக, 3000 ஆண்டுகள் தொடர்ச்சியாக மனிதர்கள் வசித்த நகரமாக, தொல் நகரமாக மதுரை இருந்துள்ளது என்பதற்கு கீழடியை விட வேறு என்ன சான்று வேண்டும்!!!

சங்ககாலத்தில் கட்டிடங்களே இல்லை என்கிற இதுகாறும் நிலவி வந்த நம்பிக்கையை கீழடி அகழ்வாய்வு மாற்றியமைத்துள்ளது. தமிழர்களின் தொன்மை பற்றி அகழாய்வு பணிகள், அறிவியல்பூர்வமான ஆதாரங்களை வழங்கி வருவதால் சிலருக்கு வயிறு எரிகிறது, அதைப்பற்றி நமக்கு கவலை கிடையாது, தொடர்ந்து அகழாய்வு நடைபெறும், நடைபெற்றே தீரும்.

கீழடியில் வீணாக பணம் செலவிடப்படுகிறது என்பவர்களுக்கு நம் கேள்வி ஒன்றே குஜராத்தில் சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு ரூ.3000 கோடியில் சிலை வைத்த போது அது வீண் இல்லையா, கொரோனா காலத்திலும் ரூ.30,000 கோடியில் புதிய வீடும், பாராளுமன்றமும், விமானங்களும் வீண் செலவு இல்லையா என்பதே?? துர்வாசகர் எழுதிய துர்நாற்றமான கட்டுரையை புறந்தள்ளிவிட்டு தமிழர் தொன்மையை நாம் ஆராய்வோம். ■

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI

வந்தாரை வாழ வைக்கும் பூமியில் வலிகளோடு வாழும் ஈழ அகதிகள்

ஜீவானந்தம்

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் போது பாதிக்கப்பட்டு தமது உடைமைகளை இழந்து, உயிரை மட்டும் கையில் பிடித்துக் கொண்டு தமிழகத்திற்குள் அடைக்கலம் புகுந்தவர்களே ஈழத்தமிழ் அகதிகள். 90களின் ஆரம்பத்தில் தமிழகத்துக்குள் சரணாகதியடைந்தவர்கள், 30 வருடங்கள் கடந்தும் அகதி வாழ்க்கையையே வாழ்ந்துவருகின்றனர். விடியலுக்கான வழி அவர்களுக்கு மட்டும் பிறப்பதாக தெரியவில்லை. குடியுரிமைகூட இன்றி வலிகளை சுமந்துகொண்டு வாழும் அவர்களின் அவலங்களை வெறும் வார்த்தைகளால் மட்டுமே எடுத்துரைக்க முடியாது.

இலங்கையில் இரு வகையான தமிழர்கள் உள்ளனர். ஒன்று பூர்வீகத் தமிழர்கள், மற்றையது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் இருந்து இலங்கையின் மலையகப் பகுதிகளில் தேயிலைத் தோட்டங்களை உருவாக்கவும், பராமரிக்கவும் அழைத்துச் செல்லப்பட்ட மலையகத் தமிழர்கள். இவர்களில் சிலர் தமிழகத்தில் அகதிகள் என்ற நாமத்தோடு வாழ்ந்துவருகின்றனர்.

தமிழகத்தில் உள்ள 107 முகாம்களில், சுமார் 60,000-க்கும் மேற்பட்ட மக்கள் தமிழக அரசின் மறுவாழ்வுத் துறையின் கீழ் அகதிகளாகப் பதிவுபெற்று வசித்து வருகின்றனர். தமிழகத்தில் உள்ள முகாம்களில் மக்கள் வசிப்பதற்கு ஆரம்பத்தில் பத்துக்கு பத்து என்ற அளவில் தற்காலிக குடியிருப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. குடிநீர் பற்றாக்குறை, சுகாதாரச் சீர்கேடுகள், வேலையின்மை, வறுமை, நோய், அகதி என்பதால் சமூகத்தில் சந்திக்க நேரும் அவமானங்கள், அங்கீகாரமின்மை, எதிர்காலம் குறித்த விரக்தி, கடுமையான கண்காணிப்பு. என பல பிரச்சினைகளூடாக பெரும் மன அழுத்தங்களுடன் இவர்கள் வாழ்ந்து அல்ல பிழைத்துக் கிடக்கிறார்கள் என்றால் தான் சரி.

மாலை 6 மணிக்குள் முகாமிற்குத் திரும்பிவிட வேண்டும், வெளியிலோ, வேறு முகாமிலோ தங்கியுள்ள தமது உறவினரைப் பார்க்கப்போக வேண்டுமென்றால் வட்டாட்சியரிடம் முன் அனுமதி பெற வேண்டும். வெளியே வேலை தேடச் செல்லுவதற்கு ஆயிரத்தெட்டுக் கட்டுப்பாடுகள் என முகாம்களில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகள் குற்றவாளிகளைப் போலவே தமிழக அரசால் நடத்தப்படுகின்றனர்.

ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் தமிழகத்தில் முப்பது ஆண்டுகளாக அகதிகளாக வாழ்ந்து வந்தாலும்,அவர்களுக்கு சர்வதேச ரீதியில் அங்கீகரிக் கப்பட்ட எந்தவொரு உரிமையும் வழங்க இந்திய அரசு மறுத்து வருகிறது. அகதி முகாம்களிலேயே பிறந்து வளர்ந்து பள்ளிப் படிப்பை முடித்த ஈழத் தமிழ் மாணவர்கள் அரசு கல்லூரிகளில் சேருவதற்கு இருந்துவந்த உரிமையும் பறிபோய்விட்டது. தமிழகத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட முகாம்களில் வாழும் சுமார் 70,000 ஈழ அகதிகள் கைதிகளைப் போலக் கண்காணிக்கப்படுவது ஏன்? சாவுக்குப் போவதற்கு கூட ஆர்.டி.ஓ. அனுமதி பெற வேண்டும் என்கிற அளவுக்குக் கைதிகளாக நடத்தப்படுவது ஏன்?

இந்த முகாம்கள் அனைத்தும் கியூ பிரிவு போலீசாரால் ஒரு அரை சிறைச்சாலை போலவே நடத்தப்படுகின்றன. பொலிஸார் மற்றும் அதிகார வர்க்கத்தின் அத்துமீறலை, அக்கும்பல் தம்மைக் கேவலமாக நடத்துவதைக் கேள்வி கேட்கத் துணியும் ஈழத் தமிழர்களைப் புலிகள் என முத்திரை குத்தி, ஆயுள் தண்டனை கைதிகளைப் போல அடைத்து வைப்பதற்காகவே செங்கல்பட்டிலும் பூந்தமல்லியிலும் சிறப்பு முகாம்கள் என்ற பெயரில் இரண்டு சிறைச்சாலைகள் நடத்தப்படுகின்றன.

இவ்வாறான முகாம்களில் காணப்படும் வீடுகளில் கால் நீட்டி படுத்துத் தூங்குவதே சிரமம் என்றால் அதில் அவர்கள் 30 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வருவது எத்தகைய கொடுமை என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். தமிழகத்தில் அமைந்திருக்கும் இலங்கை அகதிகள் முகாம்களின் நிலையை நினைத்தால் மனதில் அச்சமே குடிகொள்கிறது. இந்த முகாம்களில் இன்று வசிப்பவர்கள் 50 வீதமானவர்கள் தமிழ்நாட்டில் பிறந்தவர்கள். இவர்கள் இலங்கையை பார்த்தது கூட இல்லை. இலங்கையின் கலாசாரம், பண்பாடு, அரசியல் எதுவும் இவர்களுக்குத் தெரியாது. பெரியவர்கள் சொல்லக் கேட்டதுதான்! இவர்களுக்கு பிறப்பின் அடிப்படையை வைத்து இந்தியக் குடியுரிமை தரவேண்டும் என்பதே விதி. இவர்களில் ஒரு சிலர் இந்தியாவிலேயே துணை தேடி கைபிடித்துள்ளனர். அவர்களுக்கு பிறந்த குழந்தைகளுக்கும் குடியுரிமை இல்லை.

தமிழகத்தில் இருக்கும் ஈழ அகதிகளான ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்து குழந்தை பிறந்திருந்தால் அவர்கள் இங்கிருக்கும் இலங்கை துணைத் தூதரகத்துக்கு சென்று தமது பிள்ளைக்கு இலங்கை குடியுரிமை வாங்க வேண்டும். அதற்கு அவர்கள் இந்திய அதிகாரிகள் வழங்கும் திருமணச்சான்றை பெற்றுத் தரவேண்டும். இலங்கை குடியுரிமையைப்பெறுவதற்கு இடையில் இருக்கும் சட்ட நடைமுறைகளை கடக்க முடியாமல், பலர் தம் பிள்ளைகளுக்கு இலங்கைக் குடியுரிமை சான்றிதழ் பெறுவதில்லை.

போரில் தப்பித்து வந்த பலர் சொந்த நாடு திரும்ப முன்னரே வயோதிபமெய்தி இங்கேயே இறந்து விட்டனர். விரக்தி காரணமாக தற்கொலை செய்து கொண்டவர்களும் உண்டு. இங்கே வாழப்பிடிக்காமல் வெளிநாட்டுக்கு எங்காவது சென்று வாழலாம் என தப்பித்து கடலில் ஆபத்தான பயணம் மேற்கொண்டு போனவர்கள் சிலர், பிடிபட்டவர்கள் பலர், கடலிலேயே மரணத்தை தழுவியர்கள் என இவர்களின் அவல வாழ்க்கை இன்னும் முழுமையாக ஆவணப்படுத்தப்படாமலேயே உள்ளது.

இங்கேயே பிழைத்தவர்களில் பிள்ளைகளைபெற்று, பேரப்பிள்ளைகளையும் கண்டவர்களும் உள்ளனர். எங்களுக்குத் தான் குடியுரிமை கிடைக்கவில்லை. எங்கள் வாழ்க்கை முடியப்போகிறது. இங்கேயே பிறந்து வளர்ந்த தலைமுறைக்காவது குடியுரிமை கிடைக்கட்டும். அதைப் பார்த்து நிம்மதியாக நாங்கள் சாவோம். என்கிறார்கள் முகாம்களின் உள்ள வயோதிகர்கள்.

இந்திய, தமிழக அரசுகள் ஈழ அகதிகளை வேண்டா விருந்தாளிகளாகத்தான் நடத்தி வருகின்றன என்பதை இம்முகாம்கள் அனைத்தும் மாட்டுக் கொட்டகைகளைவிடக் கேவலமான நிலையில் இருப்பதிலிருந்தே புரிந்து கொள்ள முடியும், மாற்றி மாற்றி மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சி செய்தவர்கள் ஏன் இவர்களுக்கு குடியுரிமை வழக முன்வரவில்லை என்பது பெரிய கேள்வி.

இவர்களில் மிகப்பெரும்பாலோர் குடியுரிமைபெற்று இங்கேயே வாழ விரும்புகின்றனர். காரணம், இலங்கை சென்றால், அங்கு முறையாக ஆவணங்களை காட்டி, எந்த இடத்தில் வாழ்ந்தார்கள் என நிரூபிக்க வேண்டும். அனேகமானவர்களிடம் அப்படி எந்த ஆவணங்களும் இல்லை.

இப்பொழுதும் கூட NRC-CAA சட்டங்களின் கீழ் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பாங்கிளாதேஷில் இருந்து வரும் அகதிகள் இந்துக்களாக இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு குடியுரிமை வழங்கப்படும் என்று சொல்லும் இந்திய அரசு, பெரும் பகுதி இந்துக்களாகவே இருக்கும் இலங்கை அகதிகளை பற்றி அதில் வாய் திறக்கவில்லை.

நாங்கள் அனைவரும் இந்துக்கள்! அதிலும் முருகபக்தர்கள், சிவபக்தர்களே அதிகம். இலங்கையில் இருந்து வந்த இந்தியவம்சாவழித் தமிழர்களே.

(19ஆம் பக்கம் பார்க்க)

வந்தாரை வாழ வைக்கும் பூமியில் வலிகளோடு வாழும் ஈழ அகதிகள்

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் கலவர சூழலில் தங்கள் உயிரை கையில் பிடித்துக் கொண்டு தப்பி வந்து தமிழகத்தில் தஞ்சமடைந்தவர்கள். இவர்களிடம் அரசு எதிர்பார்க்கும் ஆவணங்கள் இல்லை என்பதால், இவர்கள் அகதிகளாகக் கூட அங்கீகரிக்கப்படாமல், ‘சட்ட விரோதமாக குடியேறியவர்கள்’ என்று அழைக்கப்படுகிறார்கள்.

இவர்களில் பலர் சிறிமா -சாஸ்திரி ஒப்பந்தப்படி இலங்கையில் வாழ்வதற்கான உரிமை பெற்றவர்கள். தங்கள் விவகாரம் தொடர்பாக இந்திய அரசு இலங்கை அரசுடன் பேசி முறையான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் அல்லது இந்திய பிரைஜ உரிமையாவது அளிக்கவேண்டும் என்பது இவர்களின் கோரிக்கையாக உள்ளது.

பலர் சமீபத்திய ஆண்டுகள் மீண்டும் இலங்கை செல்ல விருப்பம் தெரித்து மீண்டும் தங்கள் தாயகம் திரும்பினார்கள், கொரோனா நோய் தொற்று ஏற்பட்டது முதல் இந்த நடவடிக்கை தடைபட்டுப் போனது. என் உயிர் போனாலும் அது எங்கள் மண்ணில் தான் போக வேண்டும் என்று வயோதிபர்கள் பலர் அகதியாக சாக விருப்பமில்லாமல் தங்கள் உயிரை கையில் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள், நிச்சயம் அவர்களின் சாவில் கண்ணியம் வேண்டும் என்ற அவர்களின் ஆசையில் மண் அள்ளிப்போட இந்த உலகில் எவருக்கும் உரிமையில்லை.

“சுமார் 36 ஆண்டுகளுக்கு மேலாக இவர்கள் குடியுரிமை கொடுக்கப்படாமல், வாழவைக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்களின் நிலைமையை மத்திய மாநில அரசுகள் பரிசீலிக்க வேண்டும். தங்கள் குடியுரிமைக்காக இலங்கை அகதிகள் மாவட்ட கலெக்டரிடம் மனு கொடுக்க வேண்டும். அவர்கள் அதை மத்திய அரசுக்கு அனுப்பி கவனப்படுத்த வேண்டும்” என்றும் “ இவர்களின் நிலையைப் பார்க்கும் போது என் இதயத்தில் ரத்தம் கசிகிறது. அகதிகள் முகாம்கள் நரகத்தைப்போல உள்ளன” என்றும் நீதிபதி ஜீ.ஆர்.சுவாமி நாதன் சமீபத்தில் உத்தரவிட்டார்.

இலங்கை அகதிகள் முகாம்களில், ஒரு வீட்டுக்கும் மற்றொரு வீட்டுக்கும் ஒரே வாசல்தான். வீடுகளும் மிக நெருக்கமாக அமைந்திருக்கும். தவிர, தண்ணீர் பிடிப்பதற்கும் பொதுக்குழாய்க்குதான் வரவேண்டும். பொதுக்கழிப்பறையையே பயன்படுத்த வேண்டும். தினமும் ரேஷன் பொருள்களுக்காகக் காத்திருக்க வேண்டும். அங்கும் கூட்டம் கூடக்கூடிய சூழல்தான் இருக்கிறது. இந்த நிலையில், அரசு கடைப்பிடிக்க வலியுறுத்தும் ‘சோஷியல் டிஸ்டன்சிங்’ எல்லாம் இந்த முகாம்களில் எப்படி நடைமுறைத்த முடியும் அதிலும் அவர்களில் 90 வீதம் பேர் அன்றாடம் உழைத்தால் தான் சாப்பாடு என்கிற வறிய நிலையில் இருப்பவர்கள்.

எங்க குழந்தைகள் வீட்டுக்குள்ளையே 21 நாள்கள் இருந்து கடுமையான மன உளைச்சலை அனுபவித்தார்கள், இது எங்களுகு நாங்கள் போர் காலத்தில் இலங்கையில் பதுங்குழிக்குள் இருந்தை நியாபக்கடுத்துகிறது என்கிறார்கள் பலர்.

தி.மு.க.அரசு பொறுப்பேற்ற பிறகு இலங்கைத் தமிழர் அகதிகள் முகாம்களில் வசிக்கும் நம்முடைய தொப்புள்கொடி உறவுகளுக்கு ஒரு விடியல் ஏற்படும் சூழல் உருவாகி கொண்டிருப்பதை உணர முடிகிறது. அதன் ஓர் அறிகுறியாகதான் இரண்டு வாரங்களுக்கு முன்பு டெல்லிக்குச் சென்ற முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அகதிகள் முகாமில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க வேண்டும் என்று பிரதமரிடம் கோரிக்கை வைத்தார். முதலமைச்சரின் கோரிக்கை நிறைவேறும் பட்சத்தில், தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் இந்த மக்களுக்கும் உடனடியாக நிவாரண தொகை ரூபாய் 4000 வழங்க உத்தரவிட்டார்.

எங்களுக்கு ஓட்டுரிமை இல்லாததால் அரசியல்வாதிகளும் கண்டு கொள்வதில்லை. மற்ற பிள்ளைகளைப்போல், எங்கள் பிள்ளைகள் சுதந்திரமாக இருக்க முடியாது. பிறந்தது முதல் நாம் அகதிகள் என சொல்லிச் சொல்லி தான் வளர்க்கிறோம். வெளிநாடுகள்ல 5 வருஷம் இருந்தாலே குடியுரிமை கிடைக்க வழி இருக்கு. ஆனால் இந்தியாவில் எத்தனை வருஷம் வாழ்ந்தாலும் அகதிதான் எங்கள் பெயரும் பட்டமும் என்கிற அவர்களது வார்த்தைகள் வரலாற்றின் சுவடுகளில் இந்திய அரசுகள் அவர்களை எப்படி நத்துகிறது என்பதற்கு சான்று.

இந்த 30 ஆண்டுக் காலத்தில் பிரிட்டன், கனடா, பிரான்சு போன்ற நாடுகளுக்கு அகதிகளாகச் சென்ற ஈழத்தமிழர்களும் அவர்களது வாரிசுகளும் குறிப்பிட்ட காலத்துக்கான அகதி வாழ்க்கைக்குப் பின்னர், அந்தந்த நாட்டு குடிமக்கள் என்ற அங்கீகாரத்தை அங்கே பெற்றிருக்கிறார்கள்.

என்ன தான் நிவாரணமும் உதவிகளும் குடுத்தாலும் குடியுரிமை கிடைத்து இவர்கள் நம்மைப் போல சுதந்திர காற்றை சுவாசிக்க முடியும் என்கிற ஒரு நிலை தான் விடிவு காலமாக கருத முடியும்.



மாத ராசிபலன்



மேடம்

எந்த காரியங்களிலும் நேர்மையும் உண்மையும் கொண்ட மேஷ ராசி நண்பர்களே, தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். கலைத்துறையினருக்கு தகுந்த மரியாதையும் மதிப்பும் கிடைக்கும். விருதுகள் கிடைக்கும். அரசியலில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். மாணவர்களுக்கு தேர்வுகள் பற்றிய பயம் நீங்கும். கல்வியில் முன்னேற்றம் காணப்படும். கடன் பிரச்சனைகள் தொல்லை தராமல் இருக்கும். எதிர்பார்த்த பணவசதி கிடைக்கும். உங்களது செயல்களுக்கு இருந்த எதிர்ப்புகள் நீங்கும். வழக்கு விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும்.

இடபம்

பேச்சாற்றல் மூலம் எப்படிப்பட்ட சிக்கலான காரியங்களையும் சுமூகமாக முடிக்கும் திறமை உடைய ரிஷப ராசி அன்பர்களே, பொருள் வரவை சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்க பெறுவீர்கள். கலைத்துறையினருக்கு சிறப்பான காலகட்டமாக இருக்கும். தாமதமாகி வந்த வாய்ப்புகள் அனைத்தும் திரும்ப கிடைக்கும். அரசியலில் இருப்பவர்களுக்கு இந்த காலகட்டம் மந்தமாக காணப்படும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த போட்டி நீங்கும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனை தீரும்.

மிதுனம்

சொல்லிலும் செயலிலும் நிதானத்தை கடைபிடிக்கும் மிதுன ராசி அன்பர்களே, தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பெண்களுக்கு நண்பர்களிடம் உறவினர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. புதிய செயல்களை யோசித்து செய்வது நல்லது. கலைத்துறையினருக்கு அனைத்து வகையிலும் நன்மைகள் கிடைக்கும். அரசியலில் உள்ளவர்களுக்கு எந்த வேலையையும் எளிதாக செய்து விடுவீர்கள். மாணவர்களுக்கு பெரியோர்களை அனுசரித்து செல்வது நல்லது. நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நன்மையாக இருக்கும். கூர்மையான மதி நுட்பத்தால் எந்த பிரச்சனையையும் எளிதாக தீர்த்து விடுவீர்கள்.

கடகம்

கருமமே கண்ணாக இருக்கும் கடக ராசி அன்பர்களே, கொஞ்சம் பதற்றத்தை குறைத்துக் கொள்வது நல்லது. முன்பு தடைபட்ட காரியங்கள் எவ்வித இடையூறுமின்றி இம்மாதம் நடந்து முடியும்.கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும். மனதெளிவு உண்டாகும். பணவரத்து இருக்கும். கலைத்துறையினருக்கு அனைத்து விதமான நிலைகளிலும் நன்மைகளைப் பெறுவீர்கள். எதிர்பார்த்திருந்த வாய்ப்புகள் வந்து சேரும். அரசியலில் உள்ளவர்களுக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். மாணவர்களுக்கு திறமை வெளிப்படும். எதிலும் வேகமாக செயலாற்ற வேண்டும் என்ற எண்ணம் தோன்றும்.

சிம்மம்

நட்புக்கு முதலிடம் கொடுத்து காரியங்களை செய்யக் கூடிய திறமை உடைய சிம்ம ராசி அன்பர்களே, உங்களிடம் உள்ள திறமை அதிகரிக்கும். தனஸ்தானத்தில் இருக்கும் சுக்கிரன் இருப்பு பணவரத்தை அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. கணவன், மனைவி நெருக்கம் அதிகரிக்கும். கலைஞர்களுக்கு தங்குதடையின்றி புதிய வாய்ப்புகளைப் பெறலாம். புகழ் பாராட்டு வந்து சேரும். அரசியலில் உள்ளவர்களுக்கு நலல பலன்கள் கிடைத்தாலும் அதே நேரத்தில் விழிப்புடன் செயல்படுவதும் நன்மைதரும். மாணவர்களுக்கு கவனமாக பாடங்களை படிப்பது நன்மை தரும்.

கன்னி

எடுத்த காரியத்தை செய்து முடிக்கும் வரை ஊண், உறக்கம் இன்றி கடுமையாக உழைக்கும் கன்னி ராசி அன்பர்களே, இந்த மாதம் எடுத்த காரியம் கைகூடும். விரோதிகளும் நண்பர்களாவார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் செய்தொழிலில் முன்னேற்றம் காண்பார்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். பெண்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் விலகும். எதிரிகளும் நண்பராவார்கள். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. கலைத்துறையினர் சீரான நிலையில் இருக்கும். அரசியல்வாதிகளுக்கு பாடுபட வேண்டியிருந்தாலும் மிகவும் நன்றாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் உண்டாகும்.

துலாம்

அனைவருடன் நல்லமுறையில் பழகக்கூடிய துலா ராசி அன்பர்களே, தொழில் வியாபாரம் சிறிது மந்தமான நிலையில் காணப்பட்டாலும் வருமானம் குறையாத நிலை இருக்கும். குடும்ப உறுப்பினர்களிடம் இருந்த மனத்தாங்கல் நீங்கி மகிழ்ச்சியும், சகஜ நிலையும் காணப்படும். பெண்களுக்கு மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். அரசியல் துறையினருக்கு இந்த காலகட்டம் சில நற்பலன்களை தந்தாலும் மனகஷ்டமும் அவ்வப்போது உண்டாகும். கலைத்துறையினருக்கு கவனம் தேவை. மாணவர்களுக்கு சக மாணவர்களிடம் சகஜமாக பேசி பழகுவது நல்லது. உற்றார்-உறவினர்களின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி அளிக்கும்.

விருச்சிகம்

நிதானமாகவும், செம்மையாகவும் காரியத்தை செய்து வெற்றி பெறும் விருச்சிக ராசியினரே, பணவரவு அதிகமாகும் தொழில் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்க பெறுவீர்கள். வியாபாரம் தொடர்பான வெளியூர் பயணங்கள் சாதகமான பலன் தரும். குடும்பத்தில் வாழ்க்கை துணை மூலம் மகிழ்ச்சி உண்டாகும். கலைத்துறையினருக்கு உங்கள் கௌரவம் உயரும். அரசியலில் உள்ளவர்களுக்கு தீவிர முயற்சிகளின் பேரில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். மாணவர்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். கல்வியில் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும். தடைபட்ட காரியங்களில் இருந்த தடைநீங்கி சாதகமாக நடந்து முடியும்.

தனுசு

எல்லோராலும் பாராட்டப்படும் வகையில் நடந்து கொள்ளும் தனுசு ராசி அன்பர்களே, வெளியூர் பயணங்களால் அலைச்சலும், எதிர்பாராத பொருள் இழப்பும் இருக்கும். குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடக் கும். நிம்மதி ஏற்படும். கலைத்துறையினருக்கு நல்ல லாபம் கிடைக்கும். அரசியலில் உள்ளவர்களுக்கு நற்பெயர் எடுப்பதற்கான சூழ்நிலைகள் உருவாகும். மாணவர்களுக்கு வழக்கத்தை விட கூடுதல் நேரம் ஒதுக்கி பாடங்களை படிப்பது நல்லது. அடுத்தவர்களுக்காக பொறுப்புகளை ஏற்கும்போது ஒரு முறைக்கு பலமுறை யோசித்து முடிவு எடுப்பது நல்லது. பெரியோர்களின் உதவியும் கிடைக்கும். மனதில் தைரியம் தன்னம்பிக்கை உண்டாகும்.

மகரம்

மனத்துணிவும், எதையும் செய்து முடிக்கும் ஆற்றலும் அதிகம் பெற்ற மகர ராசி அன்பர்களே, தொழில் வியாபாரத்தில் ஏற்படும் பணதேவையை சரிகட்ட நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் வீண் பிரச்சனைகள் தலைதூக்கும். அவற்றை லாவகமாக கையாண்டு சமாளிப்பீர்கள். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படலாம். கலைத்துறையினருக்கு முயற்சிகளின் பேரில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். அரசியலில் உள்ளவர்கள் வாகனங்கள் பயன்படுத்தும் போது கவனம் தேவை. மாணவர்களுக்கு தேர்வில் கூடுதல் மதிப்பெண் பெற எடுக்கும் முயற்சிகள் கைகூடும். வீண் அலைச்சலை தவிர்ப்பது நல்லது.

கும்பம்

எதிலும் நியாயமும், நேர்மையும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் கும்ப ராசி அன்பர்களே, சொன்ன சொல்லை காப்பாற்ற பாடுபட வேண்டி இருக்கும். திடீர் கோபம் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்களில் கூடுதல் அலைச்சல் இருந்தாலும் முடிவில் சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கலாம். கலைத்துறையில் இருப்பவர்களுக்கு மிகுந்த உகந்த காலகட்டமிது. அரசியல்வாதிகள், சமூக சேவகர்களுக்கு பலன்கள் நன்மை தீமை என கலந்து கிடைத்தாலும் சிறப்பாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண கூடுதல் கவனமுடனும் ஆசிரியர்களின் உதவியுடனும் பாடங்களை படிப்பது நல்லது.

மீனம்

எவ்வளவு தோல்விகள் வந்தாலும் தன்னம்பிக்கையுடன் அத்தனையையும் முறியடித்து வாழ்வில் வெற்றி பெறும் ஆற்றல் உடைய மீன ராசி அன்பர்களே, எதிலும் நன்மையே நடக்கும். தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு தொழில் வியாபாரம் தொடர்பான விவகாரங்களில் வீண் இடையூறுகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் இருக்கும். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த அளவு வாய்ப்புகள் வந்து குவியும். அரசியல்துறையினருக்கு எந்த வாக்குறுதியையும் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு ஆசிரியர் ஆதரவு கிடைத்தாலும் சக மாணவர்களிடம் கவனமாக பழகுவது நல்லது.

ஆஸி. தடுப்பில் நாடற்ற தமிழன்!



தாய்மடி, தாய் மண் இவை இரண்டுமே ஒரு மனிதனுக்கு மிக முக்கியம். தாய் மடி இல்லாவிட்டால் அவன் அநாதையாவான். எவ்வளவுதான் செல்வம் குவிந்தாலும் ஏக்கம் என்பது இறுதிவரை தொடரவே செய்யும். அதுபோலத்தான் தாய் மண் இல்லாதவன் அகதியாவான். அதிலும் குறிப்பாக நாடற்றவனாக வாழ்வதென்பது கொடூமையிலும் கொடியது. இந்நிலை எவருக்கும் வந்துவிடக்கூடாது என்பதே இரக்கமற்றவர்களின் வேண்டுதலாகக்கூட இருக்கும்.

ஆனால் இதுபோன்றதொரு வலியை சுமந்துக்கொண்டு வாழ்கின்றார் ஈழத்து இளைஞர் ஒருவர். பிறக்கும்போதும் அகதி நாமம், விடிவுதேடி வெளிநாடு சென்ற இடத்திலும் அகதி முத்திரையென துயரம் அவரை துரத்துகின்றது.

" இலங்கை அரச பயங்கரவாதப் பிடிக்குள் இருந்து தப்பித்து தமிழ்நாடு வந்த தமிழர்களில் ஒரு குடும்பமே எனது குடும்பமும். தமிழக அகதி முகாமில்தான் 1990 இல் நான் பிறந்தேன். இன்றவளிலும் அகதியாகவே வாழ்கின்றேன்." - என்று துயரை எம்முடன் பகிர ஆரம்பித்தார் கண்ணா என்கின்ற கயேந்திரன் மோகன்.

சிட்னியில் வைத்து கடந்த ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்ட கண்ணா, பேர்த்தில் உள்ள தடுப்புகாவலில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் எதிரொலி யின் வலிசுமந்த வாழ்க்கை என்ற பகுதிக்காக கண்ணாவை தொடர்பு கொண்டிருந்தோம்.

ஆரம்பத்திலேயே கோரிக்கையொன்றை முன்வைத்து எம்முடனான உரையாடலை அவர் தொடங்கினார்.

" எனது கைது எவ்வாறு நடந்தது என்பதை முதலில் தெரிவிக்க வேண்டும். ஏனெனில் அகதிகள் கைது செய்யப்பட்டாலேயே, மது போதையில் சென்றமையால்தான் கைது என்ற கதை உலாவும். எனவேதான் இது பற்றி விளக்க வேண்டும்." - என்பதுதான் அந்த கோரிக்கையாகும்.

" நான் மெல்பேர்னில்தான் வசித்து வந்தேன். நண்பனை சந்திப்பதற்காக சிட்னி வந்திருந்தேன். அப்போது நண்பனின் வாகனத்தை செலுத்திய போதுதான் பொலிஸார் என்னை மறித்தனர். இதன்போது இந்திய சாரதி அனுமதி பத்திரத்தை தான் வைத்திருந்தேன். அதனால் என்னிடம் விசாவை கேட்டனர். எந்த விசாவும் இல்லை என்றேன். அதன்பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஆஸ்திரேலிய எல்லைப்பாதுகாப்பு பிரிவினரிடம் கையளிக்கப்பட்டேன்.

கைது செய்யப்பட்டபோது போதைப் பொருள் பாவனை குறித்து பொலிஸார் பரிசோதித்தனர். ஆனால் எந்த மது பாவனையில் ஈடுபடவில்லை என்பது உறுதியாகியது என்பதை கூறிக்கொள்கிறேன்." என்று கைதுக்கான காரணத்தை தெளிவுபடுத்திய பின்னர் உரையை தொடர்ந்தார்.

"எனது பெற்றோர் வாழ்ந்த இடம் வவுனியா என்று பெற்றோர் சொல்லிதான் எனக்கு தெரியும். நான் அங்கு போனதும் இல்லை. அந்த விவரங்கள் ஏதும் எனக்கு தெரியாது. 1990 ஆம் ஆண்டு எனது பெற்றோர் இலங்கையரசின் தாக்குதல்களிலிருந்து தப்பித்து தமிழ்நாடு வந்து சேர்ந்தனர். அப்போது நான் அம்மாவின் கருவறையில்.... தமிழ்நாடு அகதி முகாமில் தான் எனது பிறப்பு நடந்தது. அகதி முகாம் என விளிப்பதைவிடவும் தமிழ்நாட்டின் அகதிகளுக்கான தடுப்பு காவலில்தான் நான் பிறந்தேன் எனக் குறிப்பிடுவதே மிகப் பொருத்தமாக இருக்கும். இன்றுவரை அது சிறப்பு தடுப்பு முகாமாகதான் இருக்கிறது. எந்த தடுப்பு முகாமில் எனது பிறப்பு இடம்பெற்றதோ அதேபோன்ற தடுப்பு முகாமிலிருந்து இப்போது பேசிக்கொண்டிருக்கின்றேன்." என உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்திக் கொண்டிருந்த கண்ணாவிடம், ஏன் தமிழ்நாட்டு அகதி முகாமிலிருந்து ஆஸ்திரேலியா வரவேண்டும் என்ற எண்ணம் உருவானது என்ற வினாவை எழுப்பினோம்.

"ஒரு மனிதன் எப்போதும் சுதந்திரத்தைத்தான் விரும்புவான். அகதி என்றால் குற்றவாளியா என்ற வினாவை சிறுவயது முதல் என்னை நானே கேட்டுக்கொள்வேன். காலையில் வேலைக்கு செல்வதுமுதல் அனைத்து விடயங்களுக்கும் அனுமதி பெற வேண்டும். அவ்வாறு அனுமதியின்றி வெளியில் சென்று அகப்பட்டால் அடி உதை. திருமணம் முதல் செத்த வீடுவரை எங்கு சென்றாலும் அதிகாரிகளின் அனுமதி வேண்டும். புழல் என்ற அகதிகளின் தடுப்பு முகாம் தான் 20 வயதுவரை நான் கண்ட உலகம். அந்த உலகம் அகதிகளை அடிமையாக வைத்திருக்கும் நரகமாக தான் இன்றுவரை இருக்கின்றது.

ஒரு முறை நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தோம். அங்கு வந்த பொலிஸார் எங்களை அதட்டி உள்ளே போங்கள் என்று உத்தர விட்டனர். அது என்னை கோபப்படுத்தியது, திருப்பி என் தரப்பு நியாயத்தை கேட்டேன், மறுகணம் என்னை இழுத்து அவர்களின் ஜீப்பில் ஏற்றி கொண்டு போனார்கள். இரண்டு நாட்கள் அடிமையை வேலை வாங்குவதைப்போல அனைத்து வேலையையும் வாங்கினார்கள். எங்களின் உரிமைகள் குறித்து பேச யாருமே இல்லை தானே என்ற மனநிலையோடு அனைத்தையும் பொறுத்துக்கொண்டே செய்தேன்.

அதேபோல அகதி முகாமில் ஒரு போராட்டம் முன்னெடுக்கப்பட்டால் போதும், இலங்கையில் யுத்தம் முடிவுற்ற பின்னரும் அங்கு இன்று வரை இருக்கும் ஒரே கேள்வி நீ புலிகள் அமைப்பா? அடிப்படை வசதிகளுக் கூட ஆடிப்போய்தான் இருக்கின்றோம். அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு ஒரு மனிதனால் மூச்சு விட முடியுமா மூன்று தலைமுறைகளாக முட்டி மோதி வாழ்ந்தும் விடிவு இல்லையே. எனது 20 ஆவது வயதில் சுதந்திரமாக வாழவேண்டும். அதனால் தான் ஆஸ்திரேலியா வந்தேன். " - என்று எமது வினாவுக்கு விரிவானதொரு பதிலை விரக்தி மனநிலையுடன் வழங்கினார். 20 வருடங்களாக அவர் எவ்வளவு வலிகளை சுமந்திருப்பார் என்பதை அவரின் குரல் எமக்கு தெளிவாகவே விளங்கப்படுத்தியது.

ஆஸ்திரேலியா வந்த பின்னர் என்ன நடந்தது என்பது பற்றியும் கருத்து வெளியிட்டார்.

"ஆஸ்திரேலியாவில் எல்லாவிதமான விசாரணைகளும் முடிவுபெற்று நீதி மன்றில்வைத்தே , நாடு திரும்புகிறேன் என்று நான் ஒப்புதலளித்தேன். அதன்பின்னர் 2017 ஆம் ஆண்டே ஐஓஎம் என்ற அமைப்பின் ஊடாக நாடு திரும்ப பதிவு செய்தேன். அவர்கள் இலங்கை துதரகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டார்களாம். ஆனால் நான் இலங்கை பிரஜை என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்பதால் ஏற்றுக்கொள்ள முடியாது என இலங்கை தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இந்தியாவில் இருந்து வந்ததால், இந்திய துதரகத்தை தொடர்பு கொண்ட ஐ ஓ எம், என்னை மீண்டும் இந்தியாவுக்குள் அனுமதிக்க கோரிக்கை விடுத்தது. ஆனால், இவர் அகதி, எமது நாட்டு பிரஜை அல்லர் என்ற பதிலை வழங்கி இந்தியாவும் ஏற்கவில்லை. இலங்கை மற்றும் இந்திய தரப்பில் இவ்வாறு வழங்கப்பட்ட பதில்களையடுத்து, நான் நாடற்றவன் என்பதே புரிந்தது. நாடற்றவனுக்கு தடுப்பு முகாம் தான் வாழ்க்கை என்ற பாடத்தை மீண்டும் புரிந்துகொண்டேன். ■

ஊழிக்காலம்-2

25

புயலுக்குப்பின்...

அம்மா இதில இருக்கிறவங்கள புறப்பட சொல்லுங்க நான் மத்தபுளொக்குக்கும்பொயிட்டு வாறன் என்று துண்டுச் சீட்டுகளை பார்வதியிடம் கொடுத்தாள். அவள்போனதும் பார்வதி துண்டைப்பார்த்தாள். அதில் சந்திக்க வந்தவர், சந்திக்க வேண்டியவர் என இருவருடைய பெயரும் இருக்கும். பிள்ளைகள் அவளைச் சூழ்ந்து கொண்டு யார் யாரைப் பார்க்க வந்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்பினார்கள். அத்துண்டுகள் சிங்களத்தில் எழுதப்பட்டவை. பார்வதி அவற்றை வாசித்தாள். தனது துண்டை எடுத்தபோது அது புலேந்திரன் இல்லை சுந்தரி என்றிருந்தது.

“அட கடவுளே! பிள்ளை இஞ்சே இந்த தொப்பியள கொட்டிலுக்க என்ர பெட்டிக்கு மேல வைச்சுவிடும்.” அதை வாங்கியவள்,

“ஏன்...மம்மீ “ என்றாள்.

“அது மருமகனுக்குப்பின்னினது வந்திருக்கிறது வேற ஆக்கள் அதுதான்.” என்றாள். பின்னுள்ள புளொக்கிலிருந்து பிள்ளைகள் வரவும் இவர்களும் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். போகும் போதும் வரும்போதும் ஒரு சிங்களச் சிப்பாய் உடன் வரவேண்டுமென்பது விதி.

சுந்தரி இரண்டு அப்பிள் பழங்களையும் ஒரு நூறு கிராம் பிஸ்கட் பைக்கட்டையும் வாங்கி வந்திருந்தாள்.

“முக்கியமா நான் உங்களப் பாக்க வந்தது. இவர அப்பப்பாவ வீட்டில கொண்டுவந்து இறக்கிவிட்டிட்டுப் போயிற்றாங்கள். இண்டைக்கு மூண்டு நாளாகிது சாப்பிட்டிட்டு படுக்கிறதெண்டா பிரச்சனையில்ல... வீட்டுக்குள்ளயே மலசலங்கழிச்சா எப்பிடி? காலம வெள்ளெண வீடுவாசலையுங் கழுவி அந்தச் சனியனையுங் கழுவி குளிப்பாட்டி விட்டிட்டுத்தான் வாறன். என்ன ஒரு மனிசனுக்கு அறிவில்லையா? இனி, அரியண்டங் கண்டா பிள்ளையள் சாப்பிடாது. நான் என்ன செய்யிறது.?”

“ஏன் கொண்டு வந்து விட்டவங்கள்.”

“இந்தாள் சொல்லியிருக்கு பெரிய மதிப்பா தனக்கு வீடுவாசலிருக்கு பிள்ளை இருக்கிறான். நான் போப் போறன் எண்டு.”

“ஏன் மகன் செத்தது தெரியாதா?”

“தெரியேல்லப்போல”

“நீங்க அறிவிக்கேல்லயா?”

“எங்க நாங்க செத்த வீட்டில நிண்டம் ஆர் அறிவிக்கிறது”

பார்வதியால் எதுவும் பேச முடியவில்லை. ஒரு ஏழு கிலோமீட்டர் தொலைவிலிருந்த மணியத்துக்கு அவரது பெற்ற மகன் செத்துப்போன செய்தி அறிவிக்கப்படவில்லை. ஆனால் இவ்வறிவித்தல் லண்டனுக்குப் போயிருக்கிறது. அங்கிருந்து மரணச் சடங்குக்கான பணத்தை இன்னொரு மகனான சுதன் அனுப்பியுள்ளான். அனால் இதை தந்தைக்கு அறிவிப்பதால் எந்தவொரு பொருளாதார நலனும் விளையப்போவதில்லை என்பதால் அறிவிக்கவில்லை.

“நான் இங்கயிருந்து என்ன செய்ய முடியும் புலேந்திரனிட்டச் சொல்லி வேற எங்கயாவது முதியோர் இல்லத்தில விடமுடியாதா?”ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காகவே சொன்னாள் பார்வதி.

“புலேந்திரனா...? அது உங்களுக்குத் தெரியாதா...?”

“ஏன்...என்ன?”

“புலேந்திரன் வீட்டுக்க ராவுல திருடர் பூந்து உள்ள நகையெல்லாம் பறிச்சுக்கொண்டு மனிசியையும் இழுத்துக்கொண்டு போயிற்றாங்கள். நாலு வீட்டில அக்கம் பக்கமா களவெடுத்திட்டாங்கள். பொருள் போனாப் போகுது பெண்டாட்டியக் காப்பாத்தவேணுமெண்டு பக்கத்தில கிருபாவையுங் கூட்டிக்கொண்டு பிள்ளை வழிமறிச்சு துரத்திப் போனவங்கள். இதுக்குள் மனிசிக்காறி அவங்கட கைய திருகிப் பறிச்சுக் கொண்டு ஓடி வந்திட்டாள். இவங்கள் போய் மறிச்ச உடனை அவங்கள் துவக்கால படபடண்டு சுட்டிட்டாங்கள். புலேந்திரன் அந்த இடத்திலேயே முடிஞ்சிது. கிருபா ரெண்டுநாள் வாட்டில கிடந்து அவனும் மூண்டாம் நாள் செத்திட்டான்.”

பார்வதியின் தலையில் பேரிடி விழுந்ததுபோல உணர்ந்தாள் ‘ஐயோ புலேந்திரா... ஆபத்தைப் பொருட்படுத்தாம எங்களுக்கு எவ்வளவு உதவியளச் செய்தாய்...எங்களப் பாதுகாப்பா வச்சிட்டு நீ உன்னைப்பாதுகாக்க ஏலாமப் போயிட்டியே...’ அதற்குமேல் சுந்தரி,

“இண்டைக்குப் பதினெட்டு நாளாகுது. ஆரும் சொல்லியிருப்பினமெண்டு நினைச்சன்.”என்றாள்.

உங்கள் குழந்தைகளுக்கு மிகச் சிறந்த ஆரம்பத்தைக் கொடுங்கள்.

3-YEAR-OLD KINDER
Best Start
Best Life

மூன்று- வயதானோர் பாலர் பாடசாலையில் இப்போது சேர்த்துவிடவும்.

அடுத்த ஆண்டு, மாநிலம் பூராக இருக்கும் சிறுவர்களுக்கு ஒரு வாரத்திற்கு ஆகக் குறைந்தது ஐந்து மணித்தியால நேரம் நிதிஉதவி அளிக்கப்பட்ட மூன்று- வயதானோர் பாலர் வகுப்புக்குப்போக முடியும்.

vic.gov.au/kinder இல் உங்கள் உள்ளூர் சேவைகளைப் பாருங்கள்

FSA/DET0016-09

THE EDUCATION STATE

VICTORIA State Government | Education and Training

KINDERGARTEN Victorian Government Approved

NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Security Alarm
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

Month	Final Cut Off date	Estimated Arrival Date	Month	Final Cut Off date	Estimated Arrival Date
August	2021-08-07	2021-09-14	October	2021-10-16	2021-11-23
August	2021-08-14	2021-09-21	October	2021-10-23	2021-11-30
August	2021-08-21	2021-09-28	October	2021-10-30	2021-12-07
August	2021-08-28	2021-10-05	November	2021-11-06	2021-12-14
September	2021-09-04	2021-10-12	November	2021-11-13	2021-12-21
September	2021-09-11	2021-10-19	November	2021-11-20	2021-12-28
September	2021-09-18	2021-10-26	November	2021-11-27	2022-01-04
September	2021-09-25	2021-11-02	December	2021-12-04	2022-01-11
October	2021-10-02	2021-11-09	December	2021-12-11	2022-01-18
October	2021-10-09	2021-11-16	December	2021-12-18	2022-01-25

Transco™ CARGO
We love to deliver

45 Adrian Rd, CAMPBELLFIELD - (03) 9357 7228
206-208 Discovery Road, DANDENONG SOUTH - (03) 9703 2255

follow us on

We love to deliver

SYDNEY - 02 9897 0004 | BRISBANE - 07 3219 0203 | ADELAIDE - 08 8322 8825 | PERTH - 08 9452 7707 | CANBERRA - 02 62821905 | DARWIN - 08 79790002 | TASMANIA - 03 90174167

1300 1 TRANSCO (1300 187 267) | WWW.TRANSCOCARGO.COM.AU